மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை (27.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 221




## கிளிநொச்சி, முல்லைத்தீவில் தீவிர தாக்குதலுக்குத் தயார்

### விடுப்பில் சென்ற இராணுவத்தை அழைக்கின்றார் ஜனாதிபதி



(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகள் மீது தாம் தீவிர தாக்குதல்களை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அதற்காக விடுப்பில் சென்றுள்ள இராணுவத்தினர் அனைவரும் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று அநுராதபுரத்தில் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களை விடுதலைப்புலிகளிடமிருந்து நாம் ஏற்கனவே மீட்டு விட்டதாக அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த,

அடுத்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள தமிழ் மக்களைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்பதற்கான தாக்குதலைத் தாம் ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆகவே தற்போது விடுப்பில் சென்றுள்ள இராணுவத்தினர் அனைவரும் உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். அப்படிப் பணிக்குத் திரும்பாதவர்கள் மீது இராணுவ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ந-5)

## நாடெங்கிலும் இன்று ஏக காலத்தில் தேடுதல்

### புலிகளின் குரல் கலைஞர் ராணிமைந்தன் வீரச்சாவு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிக் கவிஞரும் படைப்பாளரும் புலிகளின் குரல் வானொலியின் கலைஞருமான லெப். கேணல் ராணிமைந்தன் வீரச்சாவடைந்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

### பவள் வாகன விபத்தில் சாவகச்சேரியில் பெண் பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஏ-9 வீதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் இராணுவப் பவள் கவச வாகனத்தினால் மோதுண்டு பெண் ஒருவர் பலியானார்.

இச் சம்பவத்தில் கச்சாயைச் சேர்ந்த கனகலிங்கம் தர்மராணி (வயது-65) என்ற பெண்ணே பலியானார். வாகனத்தைப் பின்நோக்கிச் செலுத்தும் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்துப் பவள் கவச வாகனத்தின் சாரதியைக் கைது செய்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

### உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான

உயிரியல் -பகுதி II


பௌதிகவியல்-I (பகுதிII)

பாட மாதிரி வினாத்தாள்.

### நாட்டைக் காக்கும் திட்டமாம்

(கொழும்பு)

இன்று நாடெங்கிலும் ஏக காலத்தில் சோதனை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. நாட்டைக் காப்போம் எனும் திட்டத்தின் கீழ் இப் புதிய பலப் பரீட்சையில் அரசு இறங்கியுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)



## மோதல் இடம்பெறும் பகுதியிலுள்ள மக்களை இராணுவ முன்னரங்கப் பகுதிக்கு அழைப்பு

### இராணுவத் தளபதி விடுப்பு

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள மக்களை இராணுவத்தினரின் முன்னரங்கப் பகுதிகளுக்கு வருமாறு கோரிக்கை விடுத்துள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, நவம்பர் மாத இறுதியில் விடுதலைப்புலிகள் மாவீரர் தினத்தைக் கொண்டாடும்போது அங்கு எதுவும் இருக்காது எனவும் விடுதலைப்புலிகள் பதுங்கு குழிகளுக்குள்ளேயே ஒன்று கூடுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

மன்னார், வவுனியா, மணலாறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் மோதல்களில் இராணுவத்தினர் வெற்றிகரமாக முன்னேறி வரும் நிலையில், விடுதலைப்புலிகளின் பிடியில் சிக்கியிருக்கும் மக்கள் வெளியேறுவதற்கு இந்த மோதல்கள் உதவும் எனவும் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் கூறியிருந்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருக்கும் மக்களை இராணுவத்தினரின் முன்னரங்கப் பகுதிகளுக்கு வருமாறு கோரிக்கை விடுத்திருக்கும் இராணுவத் தளபதி, தமது கட்டுப்பாட்டின் கீழிருந்து வெளியேறும் மக்களைத் தடுப்பதற்குப் புலிகளுக்கு நேரம் இருக்காது எனவும் கூறியுள்ளார்.

2006-2007 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கிழக்கில் முன்னெடுக்கப்பட்டதைப் போன்று தற்போது வன்னியிலிருந்து பெருந்தொகையான மக்கள் வெளியேறுவார்கள் எனவும் அவர்களுக்கு பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து பாதுகாப்பு வழங்கப்படும்.

தற்போது மல்லாவி-துணுக்காய் மற்றும் மாங்குளம்-வெள்ளான்குளம் பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

'இராணுவத்தின் 57 மற்றும் 59 ஆம் பிரிவு இராணுவ (12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரப் பகிர்விற்கு 5 அமைச்சர்கள் ஆதரவு

## குற்றம் சுமத்துகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் 5 பிரதான அமைச்சர்கள் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருவதாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

13-வது திருத்தச்சட்டமூலத்தின் அடிப்படையில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவேண்டுமென அமைச்சர்கள் கோரி வருவதாக ஹெல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சர்களான டிலான் பெரேரா, டக்ளஸ் தேவானந்தா, ராஜித சேனாரத்ன, டியூ குணசேகர மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோரே இவ்வாறு அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவு வழங்கி வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறையின் மூலமே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்க முடியும் என நீதி அமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழத்திற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை எனவும் அனைத்துச் சமூகத்தினரும் இலங்கையர் என்று குறிப்பிடக் கூடிய ஓர் சூழ்நிலை உருவாவதே தமது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் காரணமாகவே இன்று தற்கொலைக் குண்டுகள் வெடிக்கக்காரணம் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்துக் கட்சிகளும் மாகாண சபை முறைமையை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இதனால் 13-வது திருத்தச்சட்டமூலம் அமுல் படுத்தப்படவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# அறநெறி கருத்தரங்கு

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலகமும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இன்று 27ஆம் திகதி அறநெறிக் கருத்தரங்கொன்றை நடாத்தவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இவ் அறநெறிக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர். (ந-52)

# கிழக்கிற்குச் செல்ல அனுமதி மறுப்பு அரசின் நியாயமற்ற செயல்

## ஐரோ.நாடாளுமன்றக் குழு விசனம்

(கொழும்பு)

கிழக்கிற்கு விஜயம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதி மறுத்தமையினூடாக தமது விஜயத்தின் பிரதான நோக்கம் நிறைவேறவில்லை என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் குழு தெரிவித்துள்ளது.

தமது குழுவினருக்கு திருகோணமலைக்குச் செல்ல அனுமதீ வழங்குவதாக அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தபோதிலும் இறுதி நேரத்தில் அனுமதி மறுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதன் காரணமாக தமது குழு விமான நிலையம் வரை சென்று மீண்டும் திரும்ப வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டதாக குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் இந்தப் பொறுப்பற்ற செயலினால் பல மாதங்களாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கை விஜயம் பயனற்றதாக அமைந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# ஜனாதிபதி-செயலாளர் முறுகல் உச்சமடைகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதியின் சிரேஷ்ட செயலாளர் லலித் வீரதுங்கவுக்குமிடையே முறுகல் ஏற்பட்டுள்ளதாக பிரபல சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியீட்டுள்ளது.

அண்மையில் பொதுநிகழ்ச்சி யொன்றின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயலாளரை பகிரங்கமாக விமர்சித்ததனைத் தொடர்ந்து இந்த முறுகல் நிலை உக்கிரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தமது பதவியை கூடிய சீக்கிரம் இராஜினாமாச் செய்வார் என ஜனாதிபதிச் செயலகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பல செயற் திட்டங்களில் மிகவும் காத்திரமான வகையில் லலித் வீரதுங்க பங்களிப்பு நல்கியுள்ளார் எனப்பெயர் குறிப்பிட விரும்பாத ஜனாதிபதி செயலக உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (ந)

# ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் பொறுப்பற்று நடந்துள்ளனர்

## வெளியுறவு அமைச்சர் போகொல்லாகம கடுப்பு

(கொழும்பு)


தமது திருகோணமலை விஜயம் இரத்தானமை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழுவினர் வெளியிட்டுள்ள கருத்தை வெளிவிவகார அமைச்சு நிராகரித்துள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சர் றோகித போகொல்லாகம கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இதன்னைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் தமது சொந்த விருப்பத்திற்கு இணங்கவே இலங்கையில் சந்திப்புக்களை நடத்தியதாகவும் இந்த சந்திப்புக்களை அடுத்து நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பையும் அவர்கள் சுயமாகவே மேற்கொண்டதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் தமது விஜயத்தின்போது பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டதாகவும் றோகித போகொல்லாகம குறிப்பிட்டார்.

இதேவேளை இறுதித்தருணத்தில் தமது பயணம் இரத்துச் செய்யப்பட்டமை காரணமாகவே திட்டமிட்டவாறு திருகோணமலைக்குச் சென்று கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானைச் சந்திக்க முடியாமல் போனதாக ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழுவினர் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்திருந்தனர்.



எனினும் ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவினர் தம்மிடம் கேட்டிருந்த விமானத்தை தயார் செய்வதற்கு முன்னரே அவர்கள் விமான நிலையத்தில் இருந்து வெளியேறியதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிக் குழுவினர் திருகோணலைக்குச் செல்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த விமானத்தை அவர்கள் நிராகரித்ததாகவும் பின்னர் தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான விமானத்தை பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் உடன்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அந்த விமானத்தை தயார் செய்யும் முன்னரே ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் விமான நிலையத்தில் இருந்து வெளியேறிவிட்டதாகவும்அமைச்சர் குறிப்பிட்டார். (ந-5)

# இலங்கைக் கடற்படையினர் ஒருபோதும் இந்திய கடல் எல்லைக்குள் நுழையவில்லை

## தமிழக கடற்படைத் தளபதி கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினர் இந்தியக் கடல் எல்லைக்குள் சென்று மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை தமிழக கடற்படை அதிகாரி கொமாண்டர் பி.ஈ.வான் ஹல்ட்ரென் மறுத்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினர் ஒருபோதும் கடல் எல்லையைத் தாண்டவில்லை. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையை அண்மித்துச் செல்லும்போதே அவர்கள் மீது தாக்கப்படும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

குறிப்பாக இரவு வேளைகளில் மீனவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வித்தியாசம் கண்டுகொள்வது அவர்களுக்குச் சிரமமாக இருக்கும்.

எனவே தமிழக மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டாமல் இருப்பது சிறந்தது.

படகுகள் கடல் எல்லையைத் தாண்டாமல் இருப்பதற்கு, இருக்கும் இடத்தைக் கண்டறியும் கருவியைப் பொருத்திக் கொள்ள முடியும் என இந்திய கடற்படை அதிகாரி கூறினார்.

இதேவேளை இலங்கை கடற்படையினர் இந்திய கடல் எல்லைக்குள் ஊடுருவி இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக சில அரசியல் கட்சிகள் முன்வைத்த குற்றச்சாட்டை இந்தியக் கடற்படையும், இந்திய மத்திய அரசாங்கமும் மறுத்துள்ளன.

எமது கடல் பகுதிக்குள் குறைந்த அளவு மீன்களே கிடைக்கின்றன. இந்த ஒரு காரணத்திற்காகவே மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டவேண்டி ஏற்படுகின்றது என ஹல்ட்ரென் கூறியுள்ளார்.

18 ஆயிரத்திற்கும் அதிகமான படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் நிலையில் ஒவ்வொரு படகையும் கரையோரக் காவல் படையினரால் கண்காணித்துக் கொண்டிருக்க முடியாது எனவும் படகுக்ள் அல்லது கப்பல்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதே தமது கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறி தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

# பிள்ளையான் பதவியேற்றது முதல் கிழக்கில் 22 பொலிஸார் பலி

## ஐ.தே.க தெரிவிப்பு

கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பிள்ளையான் பதவியேற்றது முதல் இது வரையில் 22 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரங்க பண்டார குறிப்பிட்டுள்ளார்

மேலும் 19 பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல்களை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸாரின் செயற்பாடுகளுக்குப் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் இது ஓர் பாதகமான பின்புலத்தை உருவாக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-6)

# ஜனாதிபதி மஹிந்தவின் அழைப்பை ஷாருக்கான் நிராகரித்துள்ளார்

(கொழும்பு)

15 ஆவது சார்க் மாநாட்டின் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்குமாறு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ விடுத்த அழைப்பைப் பொலிவூட்டின் பிரபல ஹிந்தித் திரைப்பட நட்சத்திரம் ஷாருக்கான் நிராகரித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக தாம் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாதென ஷாருக்கான் அறிவித்துள்ளார்.

ஷாருக்கானைக் குறித்த கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்ள வைப்பதற்காக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியையும் சார்க் கலாசார நிகழ்வு ஏற்பாட்டுக் குழு நாடியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் இணைப்பதிகாரி சஜித் வாஸ் குணவர்தன சார்க் மாநாட்டின் கலாசார நிகழ்வுகளைப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றார். (ஓ)

# பிரதான வீதியில் கிளைமோர் தாக்குதல் மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறி

ஐந்து இலட்சம் மக்கள் பயணம் செய்யும் பிரதான வீதியில் நடத்தப்பட்டிருக்கும் கிளைமோர் தாக்குதலானது அந்த வீதியால் பயணம் செய்யும் அனைத்து மக்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கி உள்ளது என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிப்பாளர் ச.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினரின் ஆழ ஊடுருவும் அணி மேற்கொண்ட கிளைமோர் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்ட கிளிநொச்சி அரச செயலக அபிவிருத்தி உதவியாளர் சாந்தலிங்கம் விமலகுமாரின் வணக்க நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

மக்களுக்காக பணியாற்றுகின்ற வேலை அரச பணியாளர்களின் கடமையாகும். தற்போதைய நெருக்கடியான சூழலில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் அரச உத்தியோகத்தர்கள் பணியாற்ற வேண்டும். இவ்வாறான சூழலில் நிமல குமார் மீதான கிளைமோர் தாக்குதல் மூலமான படு கொலை அரச உத்தியோகத்தர்களின் பணியை வெகுவாகப் பாதித்துள்ளது.

மக்களுக்கான பணியைத் தொடர்ந்து யார் முன்னெடுத்துச் செல்வது என்பது கேள்விக்குறியாகியுள்ளது. கண்டி பிரதான வீதியென்பது வவுனியாவுக்கு அரச பணியாளர்கள் சென்று வரும் வீதி என்பது தாக்குதலாளிகளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் அவர்கள் இந்த படுகொலையினை மேற் கொண்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ஓ)

# கடமை லீவு பெற்று வீட்டிலிருந்து சம்பளம் பெற்ற கான்ஸ்டபிளுக்கு கடுழியசிறை

## மாத்தறை நீதிமன்றில் தீர்ப்பு

(கொழும்பு)

தமிழ்மொழி பயிற்சி வகுப்புக்கு செல்வதாகக் கூறி விடுமுறை பெற்று வகுப்புக்குச் செல்லாமல் வீட்டிலிருந்தவாறு மூன்று மாத சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெற்றுவந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு கடுழியசிறையுடன் அபராதம் விதித்து மாத்தறை நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

தெனியாய பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஜயசூரியஆராச்சிகே என்ற கான்ஸ்டபிளுக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் தமிழ்மொழி பயிற்சி வகுப்புக்குச் செல்வதாகக் கூறி பொலீஸ்தலைமையகத்தில் கடமை லீவு பெற்றுள்ளார். அத்துடன் தமிழ்மொழி வகுப்பிற்கு செல்வதற்கான போலி சான்றிதழையும் அவர் சமர்ப்பித்துள்ளார். எனினும் அவர் வகுப்பிற்கு செல்லாது வீட்டிலிருந்தவாறே மூன்று மாத சம்பளத்தையும் ஏனைய கொடுப்பனவுகளையும் பெற்றுவந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவரை தெனியாய பொலிஸார் கைதுசெய்தனர்.

இவர் மீது இம் மோசடி தொடர்பில் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

நீதிமன்ற வழக்கு விசாரணையில் நான்கு குற்றச் சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டதை யடுத்து இவருக்கு 10 வருட சிறைத்தண்டனையும் அதில் 4 வருடங்கள் கடுழிய சிறைத் தண்டனையாக அனுபவிக்குமாறும் உத்தரவிட்ட மாத்தறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரீத்தி பத்மசூரசேன அவருக்கு 33ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 18 மாதங்கள் கடுழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி எச்சரித்தார். (ஓ)





துளிர்கள் உள சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழாவும் ஸ்தாபகரின் பிறந்தநாள் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர் பிரம்மகுமார் கணேசலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் நிறுவன இயக்குனர் கே.எஸ். இரகுநாதன் நிற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பயிற்சியாளர்களையும் படங்களில் காணலாம்.

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோட்டை முனீஸ்வரன் ஆலய சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 12 மணியளவில் வசந்தமண்டபப் பூசை நடைபெற்று சுவாமி தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவார். (ஓ)

# உதைபந்தாட்ட அரையிறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக் நடாத்தும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் நாளை பிற்பகல் நடைபெறவுள்ளது. சென்றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் போட்டியில் சென் மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் நீக்லஸ் 'எ'அணியும், பாடுமீன் 'எ'அணியை எதிர்த்து பாடுமீன் 'பி' அணியும் மோதுகின்றன.

இப் போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் புதன் கிழமை நடைபெறும் . (ஓ)

# சின்னமடு மாதா யாத்திரைத்தல திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்திருக்கும் சின்னமடு மாதா யாத்திரை தல வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிறைவு பெறவுள்ளது.

இத்திருவிழாவினை சிறப்பாக நடாத்துவதற்குரிய ஒழுங்குகள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விழாவில் இன்று மாலை 3.45 மணிக்கு கொடியேற்றமும், 4ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு நற்கருணை விழாவும் 5ஆம் திகதி காலை 9.30 மணிக்கு திருநாட்திருப்பலியும் ஆயர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 6 ஆம் திகதி நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள க.பொ.த (உ/த) பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9மணிக்கு யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கோட்டம் ( தவிர்ந்த ) யாழ்ப்பாணம், சாவகச்சேரி, தீவக வலயப் பரீட்சை நிலையங்களில் பரீட்சைப் பணிகளில் ஈடுபடவுள்ள பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சைப் மேற்பார்வையாளர்கள், இணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் இக் கூட்டத்திற்கு தவறாது சமூகம் அளிக்குமாறு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ)

# இலங்கை செஞ்சிலுவைக் கிளை நிர்வாக சபைத் தேர்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளில் இயங்கிவரும் கிளைகளின் புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் முடிவுற்றுள்ளன. தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விபரம் வருமாறு,

**கோப்பாய் பிரிவு– வலிகிழக்கு**

தலைவர் :- இ. மயில்வாகனம், உப தலைவர் :- சீ . கதிர்காமநாதன்,செயலாளர் :- வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, பொருளாளர் :- அ. ஜெயசிங்கம்

செயற்குழு உறுப்பினர்கள்:-மு. பரமசிங்காரம் , சி. சந்திரலிங்கம்,பூ . குலராசசிங்கம், ம. அன்ரன்குமார்.

**வலிமேற்கு சங்கானைப் பிரிவு**

தலைவர்:- தி. உதயசூரியன், உப தலைவர் :- து. வாமதேவன்,செயலாளர் :- கே . வரதராசா,பொருளாளர் :- ரா . கனகராசா.

செயற்குழு உறுப்பினர்கள்:-ந. சபாரத்தின சிங்கி, க. உபேந்திரன்,சி. சிவப்பிரகாசம் திருமதி புனிதவதி சுப்பிரமணியம்.

**வேலணைப்பிரிவு**

தலைவர்:- பேராசிரியர் கா.குகபாலன், உபதலைவர் : இ.குலசிங்கம்,செயலாளர்:- ஆ.சபா நாதன், பொருளாளர்:- ச.நா.விநாயகமூர்த்தி.

செயற்குழு உறுப்பினர்கள்:-கு.பாலகிருஷ்ணன், ஏ.தியாகராசா, இ.சற்குருநாதன், சி.இரத்தினேஸ்வரன்.

**சாவகச்சேரி பிரிவு**

தலைவர்:-செ.மகேஸ் வரன், உபதலைவர்:- க.சண்முகலிங்கம், செயலாளர்:- கா.சற்குண தேவன், பொருளாளர்:- வை. இராசரத்தினம்.

செயற்குழு உறுப்பினர்கள்:-சி.ஜெயசங்கர், கு.மாதவன், சி.பொ.இராசகுலசிங்கம், த.ரகுமார்

**நெடுந்தீவுப் பிரிவு**

தலைவர்:- எ.அருந்தவசீலன், உபதலைவர் :- அ.புவனேந்திரன்,செயலாளர்: அ. ஞானறோபேட்,பொருளாளர்:பொ.டெனிற்றா

செயற்குழு உறுப்பினர்கள்:-சி.எட்வேட்ராசா, இ.அருட்பிரகாசம்,கி.யோசேப், ந.தர்மகுமார், இளைஞர் பிரதிநிதி லோ.லோகபிரசாத். (ஓ-134)

# ஆன்மீக தொடர் சொற்பொழிவு

(சங்கானை)

அராலியூர் சன்மார்க்க சபையினரின் மாதாந்த ஆன்மீக தொடர் சொற்பொழிவு - 08 இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அராலி மத்தி வண்ணபுரம் சன சமூக நிலையத்தில் அருள்நெறிச் செல்வர் சிவத்திரு வி. செல்வரத்தினம். (ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ. ப.சிவலோகநாத தேசிகர், வரவேற்புரையை சிவசுரவி சமூக சேவாமணி சிவத்திரு இ . சரவணபவான் ஆகியோர் நிகழ்த்துவர். சிறப்புச் சொற்பொழிவுகளை வடமாகாண சுயாதீன மனித உரிமைகள் நிறுவனப் பணிப்பாளர் எஸ். மோகன், சிவத்திரு க. நவரட்ணராஜா ஆகியோரும் தொடர்ந்து "ஆன்மீகத்தில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள் எனும் விடயம் பற்றி சைவப்புலவர் க. நித்திய தசிதரனும், "யோகாப்பியாசத்தால் ஏற்படும் நன்மைகள்?" எனும் விடயம் பற்றி சிவத்திரு சாயி இராமச்சந்திரனும் உரை நிகழ்த்தவுள்ளனர். (ஓ-15)


# மத்தியஸ்தர் பரீட்சை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஏற்பாடு செய்யும் புதிய மத்தியஸ்தர்களுக்கு மற்றும் ஏற்கனவே பரீட்சை எழுதியவர்களுக்கு தரம் உயர்த்தும் நோக்கத்தில் இலங்கை மத்தியஸ்தர் சங்கத்தின் எழுத்து மற்றும் செய்முறை பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பணிமனையில் நடைபெறும்.

இதில் ஒவ்வொரு கழகத்திலிருந்தும் 25 வயதுக்குக் குறைந்த ஆர்வமுள்ளவர்களை அனுப்பி வைக்குமாறு யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# படிக்காதவனில் வடிவேலுக்கு பதில் விவேக்!



சில நாட்களாக வைகைப் புயல் திசை தெரியாமல் வீசுகிறது. இப்படியே போனால் புயல் திணறிவிடும் என்பதை சமீபத்திய நிகழ்வுகள் உணர்த்துகின்றன. வடிவேலுவின் காமெடியில்சிகரம் என்றால் அது வின்னர் கைப்புள்ளயும், தலைநகரம் நாய் சேகரும்தான். நாய் சேகர் தொட்டபெட்டா என்றால் கைப்புள்ள எவரெஸ்ட். இந்த இரண்டு சிகரங்களுக்கு காரணமானவர்கள் தலையிலேயே கரகம் ஆடியிருக்கிறார் வடிவேலு. வின்னர் படத்தை இயக்கிய சுந்தர் சி.யுடன் வடிவேலுக்கு ஈ.கோ .மோதல். தலைநகரத்துக்குப் பிறகு இருவரும் சேர்ந்து நடிக்கவில்லை.

அதேபோல் ''மருதமலை'' படத்தை இயக்கிய சுராஜுடன் ''படிக்காதவன்'' படத்தில் மோதல்.

சுராஜ்–வடிவேலு இணைந்து கலக்கிய படம் தான் மருதமலை. இதில் சிரிப்பு போலீசாக வந்த கம்பீர போலீஸ்களையும் கலகலப்பாக்கினார் வடிவேலு. காமெடிக்காகவே 100 நாட்களை தாண்டி ஓடியது இப்படம். இதைத் தொடர்ந்து இருவரும் இணைந்த படம் தான் படிக்காதவன். இந்தப் படத்தின் படப்பிடிப்பில்தான் பிரச்சினை. இயக்குநர் சொன்ன டயலாக்கை வடிவேலு மாற்றிப்பேச, நான் சொன்னபடி பேசுங்க என்று இயக்குநர் சொல்ல, விருட்டென்று கிளம்பி சென்னைக்கு வந்துவிட்டார் வடிவேலு.

இந்த நிலையில் சென்னைக்கு வந்த வடிவேலு செய்த முதல் காரியம். இப் படத்திற்காக வாங்கிய அட்வான்ஸ் பணத்தை ஒரு பைசா பாக்கியில்லாமல் திருப்பி அனுப்பியது தான்.

இத்தனை நாட்கள் எடுத்த படப்பிடிப்பு செலவை யார் கொடுப்பது? வடி வேலுவை வைத்துஎடுத்த காட்சி களை எல்லாம் வேறொருநடிகரைவைத்து திரும்ப எடுக்கவேண்டுமே?

தயாரிப்பாளர்கள் சங்கம், புகார் என்று அலட்டிக் கொள்ளாமல் வடிவேலுக்கு பதிலாக விவேக்கை ஒப்பந்தம் செய்துள்ளார் சுராஜ்.சுந்தர் சி.யுடனான மோதலுக்குப் பிறகு வடிவேலுக்கு பதில் விவேக் அவரது படங்களில் தொடர்ந்து நடித்து




வருவது கவனிக்கத்தக்கது. இப்படிதிசை தெரியாமல் வீசினால் புயலின் பயணம் புறப்பட்டஇடத்திற்கேதிரும்பிவிடும்அபாயமிருக்கிறது.

# ஈழத்தமிழர்களின் கதையை படமெடுப்பேன் –அமீர்



ஈழத்தமிழர்களின் வலியையும் வேதனையையும் பதிவு செய்யும் வகையில் அவ்வப்போது ஒன்றிரண்டு படங்கள் வந்துகொண்டுள்ளன. இந்த வரி சையில் தன் பங்குக்கும் ஒரு படைப் பை வழங்க தயாராகி வருகிறார் அமீர்.

டென்மார்கில் வசிக்கும் ஈழத் தமிழரான கே.எஸ் துரை தயாரித்து இயக்கியுள்ளபடம் ''இளம்புயல்'' இப்படத்தின்பாடல்கள்வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. பாடல்களை விடுதலை சிறுத்தை களின் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட, இயக்குனர் அமீர் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் தயாரிப்பாளர் ஆர். பி. சௌத்ரி, இயக்குனர் வஸந்த், நடிகர் ஷாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

பட விழாக்களில் தனது பேச்சால் மீடியாக்களின் கவனத்தை ஈர்க்கும் அமீர், ''வாழ்த்துகள்'' என்ற ஒற்றை வரியில் பேச்சை முடித்துக்கொள்ள பத்திரிகையாளர்களுக்கு ஷொக். சிறிதுநேரம் கழித்து தயாரிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பேச ஆரம்பித்த அமீர்,

''கடந்த சில தினங்களுக்கு முன் ஏ.ஆர். ரஹ்மானுக்கு நான் கண்டனம் தெரிவித்தது போன்ற செய்தி பத்திரிகையில் வந்து அப்செட் ஆனேன். அதனால் தான் வாயைத் திறந்தால் வம்பு என்று பேசாமல் இருந்துவிட்டேன் என காரணம் கூறி பேச்சைத் தொடர்ந்தார்.''

தமிழை மறக்காமல் அதனை வளர்ப்பதில் அக்கறை எடுத்துக்கொள்வதில் தமிழக மக்களைவிட ஈழத்தமிழர்கள் தான் ஆர்வம் காட்டுகின்றனர். பெர்லின் திரைப்பட விழாவுக்காக சென்றிருந்தபோது என்னைப்பார்க்க தினமும் ஈழத் தமிழர்கள் பலர் வந்தனர். அவர்கள் வற்புறுத்தலின் பேரில் ஒருநாள் அவர்கள் வீட்டுக்கு சென்றபோதுதான் அவர்களின் வலியும், வேதனையும் புரிந்தது.

அவர்களின் உணர்வுகளை பதிவு செய்யும் வகையில் ஈழத்தமிழர்கள் பற்றி ஒரு படமெடுப்பேன் என்று அப்போதே உறுதி கூறியிருந்தேன். அதனை கண்டிப்பாக நிறைவேற்றுவேன் என்றார்.

# சினி விமர்சனம்

நட்சத்திரங்கள்:–பரத்,பூர்ணா,வடிவேலு,பொன்வண்ணன் கிங்காங், சங்கர்குருராஜா மற்றும் பலர்

இசை :–வித்யாசாகர்

இயக்கம் :–திருமுருகன்

''மெட்டி ஒலி'' புகழ் திருமுருகனின் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் இரண்டாவது படம் இது. ஜாதி மாறிகாதல் செய்தவர்களுக்குத் துணைபோனதன் அண்ணனைப் போட்டுத் தள்ளிய எதிரியை எப்படிகதாநாயகன்பழிவாங்குகிறார் என்பது கதை. எப்பவும் ஜாதி பெயரைச்சொல்லிதன்னைவளர்த்துக் கொள்ளும் பெரிய மனிதர் சங்கர்குரு ராஜா.



பெரிய மகன் இறந்துவிட்டதால் சின்ன மகன் பரத் மீது அதிக அக்கறையும், அன்பும் வைத்திருப்பவர் பொன்வண்ணன் –தாரா தம்பதியினர். பெற்றவர்களிடம் நல்லவன் போல் நடித்து, சக வயது பசங்களுடன் துள்ளித்திரியும் ''இளம் காளை'' பரத்.

## முனியாண்டி விலங்கியல் மூன்றாமாண்டு

அழகாலும், திமிராலும் தன்னைப் பார்க்க வைத்து விளையாடும் பெண் பூர்ணா...இவர்கள் தான் படத்தின் மையக் கதாபாத்திரங்கள். கல்லூரியில் படிக்க வந்த பூர்ணாவை ஆரம்பத்தில் அடக்க முயற்சிக்கிறார் பரத். ஆனால் பூர்ணாவின் காதல் வலையில் சிக்கி அடங்கிப் போகிறார். ஆரம்பத்தில் பொய்யாகக் காதலித்த பூர்ணா, பிறகு பொன்வண்ணன் வேண்டுகோளை ஏற்று பரத்தை ஒதுக்குகிறார்.

இதைப் புரிந்துகொள்ளாத பரத், பூர்ணாவை செருப்பால் அடித்து தனது கோபத்தைத் தணிக்கிறார். அதோடு தன் அண்ணனின் சாவுக்கான காரணத்தை அறிந்து சங்கர்குரு ராஜாவை பழிவாங்கத் துடிக்கிறார் பரத். தனக்கு எதிரியாகவும் தன் மகளைக் காதலிப்பவனாகவும் இருக்கும் பரத்தை போட்டுத்தள்ள முடிவெடுக்கிறார் சங்கர்குரு ராஜா.

இந்நிலையில் சங்கர்குரு ராஜாவையும், பரத்தையும் கொலை செய்துவிட ஒரு எதிரி கூட்டம் திட்டமிடுகிறது.

இந்த மூன்று முடிச்சுகளை எப்படி பரபரப்பான திரைக்கதையோடு, விறுவிறுப்பான காட்சிகளோடு அவிழ்த்து வைக்கிறார் இயக்குநர் என்பது படம்.

பெண்ணின் கடைக்கண் பார்வை பட்டாலே சாய்ந்து விடும் இளைஞராக பரத் நடித்திருக்கிறார். காதலுக்காக ஏங்கும்போதும், கோபப்படும்போதும், தன்னை உதாசீனப்படுத்தியவரிடம் சீறும்போதும், அண்ணனின் சாவைக் கண்டு அதிரும்போதும் அற்புதமாக நடித்திருக்கிறார் பரத். பூர்ணா வுடனான காதல் காட்சிகளிலும் பளிச்சிடுகிறார்.

பூர்ணாபடுசுட்டிரகம்போல! அவரது கண்களும், உதடுகளும் கூட நடிக்கிறது. கோடாங்கியாக வரும் வடிவேலு பேய் விரட்டும் காட்சியில் போடும் ஆட்டம் திரையரங்கையே அதிரவைக்கிறது.

அவர் பேயை விரட்டும் போது அவரே பயந்து நடுங்கும் காட்சிகளும், ஒரு கிழவிக்குப் பேய் ஓட்டப் போய் அவர் மீது கொலைப்பழி விழுவதும், பிறகு அதிலிருந்து தப்பிக்க முயற்சிப்பதும் செம காமெடி. வடிவேலுவுடன் சேர்ந்துகிங்காங்கும் கலக்கி யிருக்கிறார்.

ஒவ்வொரு தாயும், தந்தையும் வயசு மகன்களை இப்படித் தான் நினைத்துக்கொண்டு தூங்காமல் காவல் கிடக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறார் பொன்வண்ணன்–தாரா தம்பதியர். சென்டிமென்ட் காட்சிகளில் சபாஷ் போட வைத்திருக்கிறார் பொன்வண்ணன்.

வில்லனாக வரும் சங்கர்குரு ராஜா இன்னும் கொஞ்சம் நன்றாக நடிக்க முயற்சித்திருக்கலாம்.

வித்யாசாகரின் இசையில் பாடல்கள் இனிமையாக அமைந்துள்ளன. அதில் அந்த உடுக்கடி பாடல் சாமியாட வைத்துவிடும் ரகம்! பக்கா ஒரு கமர்ஷியல் கதை. அதை ஜாலியாக, ஜனரஞ்சகமாக இயக்கியிருக்கிறார் திருமுருகன்.

# மாதவனின் மிரட்டல் கெட் அப்



ஏவி.எம். ஸ்டுடியோவில் எடுக்கப்பட்ட ''குரு என் ஆளு'' படத்தின் பாடல் காட்சியில் நீக்ரோ இளைஞன் ஒருவர் நடுநாயகமாக ஆடிக் கொண்டிருந்தார். அடர்த்தியான கறுப்பு சுருள் முடி, தடித்த உதடு, அச்சு அசலாக ஜமைக்கா கறுப்பர் போலிருந்த அவர் , மாதவன்!

அவரே ஸ்பெஷல் விக் எடுத்து வந்து இந்த மிரட்டல் மேக்கப்பை போட்டுள்ளார். இந்த மேக்கப்பிற்கு இன்ஸ்பிரேஷன் கமல்தான். செல்வா இயக்கும் இப்படத்தில்த ஒரேயொரு பாடல் காட்சியில் மட்டும் இப்படி நீக்ரோ இளைஞனாக தோன்றுகிறார் மாதவன்.

படத்தில் மாதவனுடன் அப்பாஸ், மம்தா, மோகன்தாஸ், பிருந்தா பரேக் நடிக்கின்றனர். இந்தி ''எஸ்பாஸ்'' படத்தின் தழுவலே குரு என் ஆளு. (எஸ் பாஸ் கொரிய படமொன்றின் தழுவல் என்பது இன்னொரு சுவாரஸ்யம்)

# சேரன் மீது ப்ரியாமணி பாய்ச்சல்



கொஞ்சம் வெளிப்படையாக பேசி, வாங்கிக் கட்டிக் கொள்வது சேரனின் பொலிசி. கடந்த சில வாரங்களுக்கு முன்பு அவர் அளித்த பேட்டியில், நான் இயக்கும் பொக்கிஷம் படத்தில் நடிக்க பிரியாமணியின் கால்ஷீட் கேட்டேன். இரண்டு நாட்களில் பதில் சொல்வதாக சொன்னார்.

அதன்பின் எந்தத் தொடர்பும் இல்லை. ப்ரியாமணிக்கு அவருடைய தகுதிக்கு மேல் புகழ் கிடைத்திருக்கிறது. அதனால்தான் இந்த ஆட்டம் என்று குமுறியிருந்தார்.

இந்த விடயம் சீக்கிரமே ப்ரியாமணியின் பார்வைக்கு போய்விட்டது. அவ்வளவுதான்! ஒரு ருத்ர தாண்டவமே ஆடிவிட்டார். சேரன் என்னிடம் கால்ஷீட் கேட்டார் என்பதேதவறு. அவருடைய அலுவலகத்தில் இருந்து யாரோ பேசினார்கள்.

அவர்களிடம் இரண்டு நாட்கள் கழித்து பேசுங்கள் என்றேன். அப்போதும் சேரன் என்னை தொடர்பு கொள்ளவில்லை. அதனால் தான் நானும் சும்மா இருந்து விட்டேன். இன்னொரு விஷயம்...

மணிரத்னம் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறேன். எந்த நேரத்தில் அழைத்தாலும் வரவேண்டும் என்ற சொல்லியிருக்கிறார். பொக்கிஷத்தில் ஒப்புக்கொண்டால், மணிரத்னம் படத்தில் நடிக்க முடியாதே ? அதனால் தான் சேரன் படத்தில் நடிக்க வேண்டாம் என்று முடிவெடுத்தேன் என்கிறார் ப்ரியாமணி.

# ரஜினி வழியில் விஜய்



குசேலனில் நடிகராக ரஜினி காந்த் நடிப்பதைப் போல பந்தயம் படத்தில் நடிகராகவே விஜய் நடித்துள்ளாராம்.

விஜய்யின் தந்தை எஸ். ஏ. சந்திரசேகர் இயக்க, நிதின்சத்யா ஹீரோவாக நடிக்கும் படம் பந்தயம். இப்படத்தில் விஜய்யின் பரம விசிறி வேடத்தில் நடித்துள்ளாராம் நிதின் சத்யா. சமீபத்தில் இப் படத்தின் பாடல்கள் வெளியிடப் பட்டன.

இப்படத்தில் விஜய்யும் விஜய்யாக வே ஒரு காட்சியில் தோன்றுகிறார். எம்.ஜி. ஆர் என்று பெயரிடப்பட்ட படத்தில், பேரரசு இயக்கத்தில் விஜய் நடிப்பது போல காட்சி அமைக்கப்பட்டுள்ளதாம்.

எம். ஜி. ஆர். பட ஷூட்டிங்கின் போது விஜய்யை செட்டில் நிதின் சத்யா சந்திப்பது போல காட்சி வருகிறதாம்.

இப்படி தனதுதந்தையின் படத்தில் கெஸ்ட் ரோலில் வருவது விஜய்க்குப் புதிதல்ல. ஏற்கனவே சந்திரசேகர் இயக்கிய சுக்கிரன் படத்தில் விஜய் கெஸ்ட் ரோலில் நடித்திருந்தார்.

# தசாவதாரம் 31 நாள் ஏழரை கோடி வசூல்!



மூன்று முறை தேசிய விருது வாங்கியபோதும், பத்மஸ்ரீ விருது கிடைத்த போதுகூட இப்படி மகிழ்ந்திருக்க மாட்டார் கமல். தசாவதாராத்தின் அதிரடி கலெக்சனில்கலைஞானி ஆடிப்போயிருக்கிறார். ஏபிசி என மூன்று சென்டர்களிலும் படத்திற்கு அமர்க்கள வரவேற்பு.

வெளிநாடுகளிலும் ரஜினியின் சிவாஜி வசூலை முறியடித்து ஓடிக்கொண்டிருக்கிறது படம். இங்கிலாந்தில் மட்டும் இரண்டு கோடிக்குமேல் வசூலித்துள்ளது. சென்னையைப் பொறுத்தவரை வரலாறு காணாத வசூல், முதல் முப்பத்தியொரு நாளில் சென்னையில் மட்டும் ஏழரை கோடி வசூலாகியுள்ளது.

சுப்ரமணியபுரம், முனியாண்டிவிலங்கியல்மூன்றாமாண்டு படங்களின் வார இறுதி வசூலை விட தசாவதாரத்தின் வார இறுதிவசூல் பன்மடங்குஅதிகம். சென்றவாரம் முனியாண்டிவார இறுதி வசூல் சுமார் எட்டு இலட்சங்கள். சுப்ரமணியபுரத்தின் வசூல் சுமார் ஐந்தரை இலட்சங்கள். தசாவதாரத்தின் வசூல் ஏறக்குறைய ஐம்பத்திரண்டு இலட்சங்கள்.

கலைஞானியின் மகிழ்ச்சியில் ஒரு நியாயம் இருக்கவே செய்கிறது.

# நோத்முதல் கோபல்லவா வரை (49)



## கோல்புறூக் கெமறன் அரசியற் திருத்தம்

கோல்புறூக் குழுவினர் அமைந்த சட்ட சபையைப் பின்வருமாறு வரையலாம்.

- சட்டசபை
  - சட்டநிரூபணசபை
    - உத்தியோக அங்கத்தவர் 9
    - உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் 6 → 3 ஐரோப்பியர், 1 பறங்கியர், 1 தமிழர், 1 சிங்களவர்
  - சட்ட நிர்வாக சபை (6)
    - இவர்கள் உத்தியோக அங்கத்தவருள் இருந்துநியமனம் பெற்றவர்
  - 15..........................> (சட்டநிரூபணசபை → சட்ட நிர்வாக சபை)

இங்ஙனம் கூடிய சட்டசபை காலத்திலே வாக்குரிமை என்றோ நியமன நாள் என்றோ தேர்தல் நாள் என்றோ, வாக்களித்தல் என்றோ, ஒன்றும் இல்லை. அரசியல் கட்சி என்றால் என்ன என்றே எம்மவருக்குத் தெரியாது. எனவே ஆள்பதி அவர்கள் சில பெரியார்களைத் தமது விருப்பத்தின் வண்ணம் அழைத்துச் சட்ட சபை அங்கத்தவராக இருக்கும் படி பணித்தார். ஆள்பதி தாமே ஆட்சியை நடத்தி வந்தார். அந்த ஆட்சியைப் பணிக்குழுவாட்சி என்றும் கூறுவர்.

முதலாவது சட்டசபை அமைந்த விதமே வேடிக்கையானது சட்டசபைக்கு ஒன்பது உத்தியோகத்தரை நியமிப்பது இலகுவாயிற்று. ஆனால் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் ஆறு பேரைத் தேடுவதிலும் நியமிப்பதிலும் ஆள்பதி அவர்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டாயின. உத்தியோகப் பற்றற்றவரைத் தேடுவது அவர்களைச் சட்டசபையில் வரிசையாய் இருத்துவது பிரச்சினைக்குரிய காரியமாயிற்று. ஐரோப்பியர் பிரதிநிதிகள் மூவரையும், பறங்கியர் பிரதிநிதி ஒருவரையும், ஆள்ப்தி தேடிப்பிடித்தார். ஆனால் தமிழர் பிரதிநிதியையும் சிங்களவர் பிரதிநிதியையும் தேடிப்பிடிப்பது முயற்கொம்பாகவே இருந்தது. ஆங்கிலந் தெரிந்த உத்தியோகப் பற்றற்

### மீள் பார்வை

றவர் இல்லாமையாலே சட்டசபையின் முதற் கூட்டம் 1.10.1833 இல் கூடிய போது அதிலே உத்தியோக அங்கத்தவர் ஒன்பதுபேர் மாத்திரம் இருந்தார்கள். இலங்கையர் பிரதிநிதிகள் இடம்பெறாதமையைக் குடியேற்ற மந்திரியார் கண்டிக்கவே ஆள்பதி அவர்கள் அவசரம வசரமாய்த் தமது மொழிபெயர்ப்பாளர் இருவரை முழுச் சம்பளத்தோடு இளைப்பாறச் செய்து உத்தியோகப் பற்றற்றவர் வரிசையில் இருத்தினார். அங்ஙனம் இருத்தப்பட்டவருள் தமிழர் பிரதிநிதியாய் இருந்தவர் இராசவாசல் மகா முதலியார் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி என்பார். இவர் சேர் இராமநாதன் அவர்களின் தாயாரின் தந்தையாராவர். சிங்களப் பிரதிநிதியாய் நியமனம் பெற்றவர் முதலியார் T.J. பிலிப்ஸ் என்பாராவர். இவர்கள் 30.5.1835 தொடக்கம் சட்டசபையில் இலங்கையர் பிரதிநிதிகளாயமர்ந்து அச் சபையை அலங்கரிப்பாராயினர்.

குமாரசுவாமி முதலியார் அவர்கள் 14.5.1837 இல் இறந்து போனதால் அவருடைய இடத்தில் நியமிப்பதற்கு ஒரு பிரதிநிதியைத் தேடுவதில் ஆள்பதி அவர்களுக்குச் சிரமமேற்படலாயிற்று. ஈற்றில் கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டி என்ற தமிழ்ப் பெருமகனாரை அவ்விடத்தில் நியமிப்பதற்காக அன்னாரை உத்தியோகத்திலிருந்து இளைப்பாறச் செய்தார். ஆனால் காசிச் செட்டியார் உத்தியோகத்தை விட்டு இளைப்பாறுவதைக் குடியேற்ற மந்திரியார் விரும்பவில்லை. அதற்குக் காரணம் காசிச் செட்டியார் போன்ற ஒரு விவேகியையும் உழைப்பாளியையும் குடியேற்ற நாட்டில் காண இயலாது என்பதே.

சைமன் காசிச்செட்டியர்ர் அவர்களைப் பற்றிச் சுருக்கமாக இங்கே அறிதல் மிகப்பொருத்தமான விடயமாகும். இலங்கையின் அட்சதேசாந்தரத்தையும், நீள அகலத்தையும், அதன் நிலப்பரப்பையும் முதன் முதலில் முறையாகக் கணித்த அறிவாளி சைமன் காசிச்செட்டியாரவர்களேயாம். அவர் இலங்கை வர்த்தமானி எனப்படும் “கசற்” பத்திரிகையை இலக்கிய நயம் ததும்ப எழுதியமைக்காக அக்காலத்துக் குடியேற்ற மந்திரியார் அவர்கள் செட்டியாருக்கு 105 பொன் அன்பளிப்புச் செய்து கௌரவித்துப் பாராட்டி எழுதியுள்ளார்.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆண்ட கரையோரப் பகுதி 10520 சதுரமைல் பரப்பே என்றும் பழைய கண்டி இராச்சியப் பகுதி 14144 சதுரமைல் பரப்பென்றும் நிரூபித்து வெள்ளைக்கார நில அளவையியளாளரை திருத்திய நிபுணன் சைமன் காசிச்செட்டி என்பது சரித்திரப் பிரசித்தமான விடயமாகும். இப்பெரியார் பல துறைகளில்

**க.சி.குலரத்தினம்**

திறமை வாய்ந்தவர். பல மொழிகளைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றதோடு வரலாறு, பழைய நாகரிகம் என்பவற்றையும் நன்கறிந்தவர் அன்றி இலங்கையின் பூமி சாத்திரத்தோடு விலங்கியல் என்பதாகிய விபரங்களையும் ஐயந் திரிபுற அறிந்து எழுதினார் என்பர்.

இப் பெரியார் எழுதிய பல நூல்கள் அச்சிடப்படாமலே கையெழுத்துப் பிரதியாகவே அழிந்து போயின. இவர் எழுதிய நூல்கள் எவை என அவற்றின் பெயர்களைத் தாமும் இன்றுள்ள விவேகிகள் அறியாதிருக்கின்றனர் என்பது வியப்பாகவிருக்கிறது.

(தொடரும்)







மக்கள் பணிமனையின் இக்ரஃ முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழாவில் தலைவர் காதி நீதிபதி மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் சிறப்புரையாற்றுவதையும், மேடையில் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி உப அதிபர் மகேந்திரராஜா, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் சிதம்பரநாதன், சர்வோதய மாவட்ட இணைப்பாளர் சிவசுப்பிரமணியம், யாழ். நகர் மத்தியஸ்தர் சபை உறுப்பினரும் சமாதான நீதிவானுமாகிய சிறிபாலகிருஸ்ணன் மற்றும் பலர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், பாலர்களின் வினோத உடைக் காட்சி மற்றும் உடற்பயிற்சி நிகழ்வை அடுத்த இரு படங்களில் காணலாம்.

# 19 ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் (1)

1802ஆம் ஆண்டு இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது. பிரித்தானியாவின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இலங்கை கொண்டுவரப்பட்டமை ஆட்சி முறைமையிற் படிப்படியாகப் பல மாற்றங்கள் நிகழ ஏதுவாயிற்று. 1831 ஆம் ஆண்டு இலங்கைக்கு முதலாவது அரசியற் சீர்திருத்தம் வழங்கப்பட்டது. ஆங்கிலக்கல்வி, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, தபால், தந்தி, போக்குவரத்து வசதிகள் முதலானவற்றால் சமூக, பொருளாதார மாற்றங்கள் பல உருவாகின. இக்காலப் பகுதியிலே கல்விகற்ற மத்தியதர வர்க்கத்தினர் தோற்றம் பெற்றனர். இவர்களால் இலங்கையின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் மாத்திரமன்றிக் கலை இலக்கிய முயற்சிகளிலும் பெருமளவு மாற்றங்கள் உருவாகின.

உலக வரலாற்றிலே 19ஆம் நூற்றாண்டு பல்வேறு துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த காலப் பகுதியாகக் காணப்படுகிறது. இக்காலகட்டம் பற்றிப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பின்வருமாறு குறிப்பிடுவார்.

*.............இங்கிலாந்து இக்காலகட்டத்திற் கல்வியிலும் பொருள் வளர்ச்சியிலும், செல்வாக்கிலும் உன்னத நிலையை அடைந்திருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு அமெரிக்க, ஐரோப்பிய வரலாற்றிலே மாபெரும் நூற்றாண்டு எனக் கணிக்கப்படுகின்றது. விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றத்தினால் தொழில்வளம் பெருகியது. புதிய பண்டங்களை விற்பனை செய்வதற்காக புதிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும் அவற்றினை அடிமைப்படுத்தவும் அவசியமேற்பட்டது. புதிய அரசியற் பொருளியற் சூழ்நிலைகள் புதிய தத்துவங்களையும் பொருளியற் கோட்பாடுகளையும் தோற்றுவித்தன. ஐரோப்பிய அரசுகள் மத்தியில் சுயநம்பிக்கையும், சாதனை வேட்கையும் மிகுந்து காணப்பட்டன. எனவே, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உயிர்த்துடிப்பும் செயலூக்கமும் நிறைந்த ஆங்கிலேய அரசும் மரபு தழுவிய யாழ்ப்பாணச் சமுதாயமும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன.*

19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் உருவான புதிய உத்வேகம் பல்வேறு காரணங்களால் இலங்கையிலும் படிப்படியாக வியாபித்தது. இந்த வியாபகத்தின் விளைவுகளில் ஒன்றாகவே ஈழத்து இலக்கியச் செல்நெறியின் பரிமாணங்களையும் நோக்குதல் வேண்டும். முன்னெப்பொழுதும் இல்லாத வகையிலே ஈழத்துத்தமிழ் இலக்கியம் 19ஆம் நூற்றாண்டிலே தற்செயல் நிகழ்வாகவன்றித் தவிர்க்கமுடியாத தேவையாகியது.

ஈழத்து இலக்கிய வரலாற்றைக் கால அடிப்படையிலே பாகுபாடு செய்வோர் ஆங்கிலேயராட்சியின் முதல் நூற்றாண்டுகளை உள்ளடக்கிய 19ஆம் நூற்றாண்டினைத் தனியானதோர் காலப்பகுதியாகவே கருதுவர். ஆங்கிலேயர் காலத்து இலக்கிய முயற்சிகளை ஆராயும்பொழுது 19ஆம் நூற்றாண்டு பல துறைகளிலும் தனித்துவத்துடன் செயற்பட்டமை தெரியவரும். ஈழத்து இலக்கிய வரலாற்றிலே 19ஆம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பற்றிக் கலாநிதி. பொ. பூலோகசிங்கம் குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது.

*ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே முன்னைய காலப் பிரிவுகளிலும் குறிப்பிடத்தக்கதாகவும் சிறந்ததாகவும் மிளிர்வது பத்தொன்பதாம் நூற்றுாண்டு ஆகும். இந்நூற்றாண்டிலே தமிழ் இலக்கியம் புதிய பல சக்திகளின் தாக்கங்களினாற் பாதிக்கப்பட்டு வளர்ச்சியடைந்தது.*

கலாநிதி பூலோகசிங்கத்தின் கருத்தினைச் சற்று விபரமாகத் தமக்கேயுரிய பாணியில் பேராசிரியர் கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுவார்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

*................பல்வேறு காரணங்களினால், தமிழகத்தி லும் பார்க்க இலங்கையிலே, அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பத்தொன்பதாம் நூற்றாண்டு பல மாற்றங்களைக் கண்டதோடு பின்னர் வந்த மாற்றங்கள் பலவற்றுக்கு அத்திவாரம் இடப்பட்ட காலப்பகுதியாயும் அமைகின்றது.... தமிழ் நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி பத்தொன்பதாம் நூற்றுாண்டு இலக்கிய வளர்ச்சிக்கும் அதற்கு முற்பட்ட காலத்து இலக்கியங்களுக்கும் சில அடிப்படைக் குணவேறுபாடுகள் இருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தனியொரு காலப்பகுதியாக நாம் கொள்ளுவதற்கு ஏதுவாக இருப்பன இவ் வேறுபாடுகளேயாம். இவ் வேறுபாடுகளைக் கூர்ந்து நோக்கினால் நவீன காலப்பகுதியின் தோற்றத்தைக் குறிக்கும் காலக்கோட்டினைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி அளவில் வரைந்து கொள்ளலாம் எனத் தோன்றும்.*

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியையொட்டி, தோன்றிய அறிஞர்கள், புலவர்களின் முயற்சிகள் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி வரை நடைபெற்றுள்ளன. 19 ஆம் நூற்றாண்டிற்கேயுரிய “உள்ளூரம்” இவர்களிடம் மிகுந்து காணப்பட்டமையைக் கண்டுகொள்ளலாம். எனவே 19 ஆம் நூற்றாண்டை எல்லைக்கோடாக வகுத்தாலும் இருபதாம் நூற்றாண்டின் முதல் இரண்டு, மூன்று தசாப்தங்கள் வரையான இலக்கியச் செல்நெறியையும் உள்வாங்கியே 19 ஆம் நூற்றாண்டு என்ற வகைப்பாடு அமைய வேண்டிய ஆய்வில் தேவை தவிர்க்க முடியாதது.

(தொடரும்)

உதைபந்தாட்ட நாயகன் அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவாக
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
இன்று
- கரணவாய் சுடர் எதிர் யங்லயன்ஸ்
- அல்வாய் நண்பர்கள் எதிர் கலைமதி
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி -2008
மைதானம்:வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுத்திடல்

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

## முன்னோடிப் பரீட்சை
## Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

பொருளியல் - I (பகுதி- II)
Economics -I ( Part -II)

2மணித்தியாலங்கள்
2 Hours

**பகுதி A யில் இரண்டு வினாவும் பகுதி Bல் இரண்டு வினாவுமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01)1. மக்கள் தமது வரையறையற்ற மனித தேவைகளை நிறைவு செய்ய முற்படும் போது அவர்களால் எதிர்கொள்ளப்படும் முக்கியமான வினாக்கள் எவை?

2. "தற்போதைய சந்ததியினர் வளங்களை வேறுபாடின்றி பயன்படுத்துவார்கள் ஆயின், எதிர்கால சந்ததியினர் தமக்குரிய தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்களை இழப்பர்" விளக்குக.

3. பொருட்கள் மற்றும் சேவைகளின் சார்பு விலைகள் சந்தை பொருளாதாரமொன்றிலுள்ள அடிப்படைபொருளாதார பிரச்சினைகளை உச்சமான வகையில் எதிர்கொண்டு வெற்றிகொள்ளும் அடிப்படையில்அமைந்திருக்கும்.

i. சார்பு விலை என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

ii. அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டு வெற்றிகொள்ளுவதற்கும் சார்பு விலைக்கும் இடையிலான தொடர்பு என்ன?

02)1. பொருளாதார வளங்கள் உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் போது குறைந்து செல்லும் விளைவு விதி அங்கு செயல்படுவதை காணலாம். உற்பத்தி சாத்திய வளையின் சாய்வை நிர்ணயிப்பதற்கு எவ்வாறு குறைந்து செல்லும் விளைவு விதியும் சந்தர்ப்பச்செலவு விதியும் செயல் படுகின்றன என்பதை விளக்குக?

2. பின்வரும் சம்பவங்களை உற்பத்தி சாத்திய வளையியில் விளக்குக.

a. ஒப்பீட்டு நன்மை கோட்பாட்டின்படி ஒரு நாடானது ஒரு தொகுதி பண்டங்களை உற்பத்தி சாத்திய வளையிக்கு அப்பால் நுகரமுடிதல்

b. ஒரு பொருளாதார வளர்ச்சியின் போது விவசாயத்துறையின் சார்புரீதியான முக்கியத்துவம் குறைதலும் கைத்தொழில் துறையின் சார்பு ரீதியான முக்கியத்துவம் அதிகரித்தலும்.

3. உற்பத்தியில் உச்ச வினைத்திறன் உள்ளது என்ற எடுகோளின் அடிப்படையில் உற்பத்தி சாத்திய வளையி வரையப்பட்டுள்ளது. ஆகவே உற்பத்தி சாத்திய வளையியின் மீதுள்ள எல்லாப் புள்ளிகளும் வளங்களின் உச்ச பயன்பாட்டை காட்டி நிற்கின்றன. அப்படியாயின் உற்பத்தி சாத்திய வளையியின் மீதுள்ள ஏதாவது ஒரு புள்ளி உச்ச பயன்பாடுள்ள புள்ளியாக கருத முடியுமா?

4. மொத்த முதலீடும் தேறிய முதலீடும் என்பதனால் கருதப்படுவது யாது? முதலீட்டுக்கும் உற்பத்தி சாத்திய வளையியிக்கும் இடையிலான தொடர்பை விளக்குக.

03) ஒரு போட்டிச் சந்தையில் பின்வரும் கேள்வி நிரம்பல் தொழிற்பாடுகள் தரப்பட்டுள்ளன. கேள்விச் சமன்பாடு,

$Qd_x = 120 - 10P$

$Qs_x = 40 + 10P$

1. மேலுள்ள சமன்பாடுகளை பயன்படுத்தி கேள்வி நிரம்பல் வளையிகளை வரைந்து சமநிலை விலை யையும் தொகையையும் காட்டுக.

2. சமநிலையில் உற்பத்தியாளர் மிகையை மதிப்பிடுக.

3. இப்பண்டத்தின் மீது அரசாங்கம் 20/- வரியை விதிக்குமாயின் வரிக்கு பின்னரான உற்பத்தியாளர் மிகையை கணிக்க.

4. வரிக்கு பின்னரான உற்பத்தியாளரின் மொத்த வருமானத்தையும் தேறிய வருமானத்தையும் கணிப்பிடுக.

04)1. அரிசியின் உள்ளூர் விலை மிகவும் கூடுதலாக அதிகரித்தமையால் அரசாங்கம் அரிசி மீது உச்ச விலைமட்டத்தை அமுல்படுத்த தீர்மானித்தது.

a. பொருளாதார எண்ணக்கருவின்படி இந்நிலைமையை வரைபின் மூலம் காட்டுக. இவ் தீர்மானத்தின் பொருளாதார விளைவுகள் எவை?

2. இறக்குமதி செய்யப்பட்ட அரிசிமீது அரசாங்கம் ஒரு கிலோவுக்கு ரூ.10/- ஐ இறக்குமதி தீர்வையாக விதிப்பதற்கு தீர்மானித்தது. இத் தீர்மானத்தினால் இலங்கை அரிசிச் சந்தையில் என்ன மாற்றங்கள் நிகழக்கூடும்.

3. நிரம்பல் நெகிழ்ச்சியை துணிவதற்குரியவை எவை?

## பகுதி - B

05) அனுமானப் பொருளாதாரமொன்றின் 2007 இன் பேரினப் பொருளாதார தரவுகள் உமக்கு கீழே தரப்பட்டுள்ளது. (பெறுமதிகள் ரூ.மில்)

| | |
|---|---|
| வீட்டுத்துறை நுகர்வுச் செலவு | 10000 |
| மொத்த உள்ளூர் மூலதன ஆக்கம் | 8000 |
| வருட முடிவில் இருப்பு | |
| உள்ளீடுகள் | 200 |
| குறைநிலை வேலை | 150 |
| முடிவுப் பொருள் | 1150 |
| ஆரம்ப இருப்பு | |
| குறைநிலை வேலை | 100 |
| இறுதி இருப்பு | 400 |

பின்வரும் தகவல்கள் 2006 வரவு செலவு திட்டத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவை

| | |
|---|---|
| மொத்த அரச வருமானம் | 8000 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | 500 |
| வட்டி கொடுப்பனவு | 1000 |
| நடைமுறை மாற்றல்கள் | 1500 |

பின்வரும் தகவல்கள் 2006 சென்மதி நிலுவையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| வர்த்தக நிலுவை - | 1500 |
| சேவைகள் கணக்கு நிலுவை | 1000 |
| வருமானக் கணக்கு நிலுவை | 500 |
| நடைமுறை மாற்றல்கள் (தேறியது) | 250 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | 250 |

மொத்த தேசிய உற்பத்தி உள்வாரிச் செலவு சுட்டி 2006இல் 120 (2000 = 100)

மொத்த தேசிய உற்பத்தி 2006இல் மாறா விலையில் 16000

பின்வருவனவற்றை கணிக்க.

1. மொத்த உள்ளூர் உற்பத்தி
2. மொத்த தேசிய உற்பத்தி
3. செலவிடத்தகு தேசிய வருமானம்
4. பொருளாதார வளர்ச்சி வீதம்.

06)1. பின்வரும் பேரின பொருளாதார தகவல்கள் உமக்கு தரப்பட்டன. (பெறுமதி மி.ரூ)

மொத்த தேசிய உற்ப்த்தி நடைமுறை விலையில் 1200

உள்ளார்ந்த விலை சுட்டெண் 120 (2000 =100)

| | |
|---|---|
| ஆடை ஏற்றுமதிகள் | 3000 |
| தேயிலை ஏற்றுமதிகள் | 1500 |
| வேறு ஏற்றுமதிகள் | 500 |
| மொத்த இறக்குமதிகள் | 6000 |
| வர்த்தக மாற்று வீதம் | 90(2000 = 100) |

பொருத்தமான தகவல்களைப் பயன்படுத்தி மெய்தேசிய வருமானத்தை கணிக்க.

2. மொத்த தேசிய உற்பத்தி நடைமுறை விலையில் 220, 000

உள்ளார்ந்த விலைச்சுட்டெண் 110 (2000 -100)

நடு ஆண்டு சனத்தொகை 200 மில்லியன்

உத்தியோகபூர்வ நாணயமாற்று வீதம் US$= ரூ.100

மெய் தலா வருமானத்தை US$ கணிக்க

3. வருமானம் 1000/- வாகவும் நுகர்வு செலவீடு ரூ 800/- ஆகவும் இருக்கும் போது வருமானம் ரூ.2000/- ஆலும் நுகர்வு ரூ 1500/- ஆகவும் அதிகரிப்பின்,

i. எல்லை நுகர்வு நாட்டம் யாது?

ii. எல்லை சேமிப்பு நாட்டம் யாது?

4. நுகர்வு : C=100+0.8 yd

வரி T=100

முதலீடு I=1000

அரசாங்க செலவு = 120

நிறை தொழில் மட்டத்தில் தேசிய வருமானமானது ரூ2200/- எனின் இப் பொருளாதாரத்தில் அவ் மட்டத்தை அடைவதற்கு முதலீடு எவ்வளவால் அதிகரிக்கப்பட வேண்டும்.

5. C=0.8 yd

I=200

i. முதலீடு ரூ 100 மி அதிகரிப்பின் மொத்த பெருக்கியின் 3ஆவது சுற்றோட்ட தாக்கத்தின் பின் வருமானத்தை கணிக்க.

ii. பெருக்கியின் விளைவின் பின் மொத்த தேசிய வெளியீட்டு மட்டம் யாது?

07) ஒரு பொருளாதாரத்தின் 2007ன் அரசு நிதியிடல் பற்றிய தரவுகள் உமக்கு கீழே தரப்பட்டுள்ளது. (எல்லா தொகைகளும் ரூ மில்லியனில் உள்ளது)

| | |
|---|---|
| பொது நுகர்வு | 35000 |
| நேர் வரிகள் | 10000 |
| மெய் சொத்துக்கள் கொள்வனவு மீதான மூலதன செலவீனம் | 20000 |
| நேரில் வரிகள் | 40000 |
| வட்டிக் கொடுப்பனவு | 8000 |
| சந்தையல்லா நிதியீட்ட வழிகள் | 2000 |
| மூலதன மாற்றல்கள் | 4000 |
| வெளிநாட்டு கடன்கள் நீண்டகாலம் | 6000 |
| குறுகியகாலம் | 5000 |
| வரியல்லா அரசவருமானம் | 15000 |
| நடைமுறை மாற்றல்கள் | 17000 |
| வங்கியல்லா நிதியீட்டவழிகள் | 4000 |

பொருத்தமான தகவலை பயன்படுத்தி பின்வருவனவற்றை கணிக்க.

1. முழு மொத்த மீதி 2. அரசாங்க சேமிப்பு

3. பாதீட்டின் பணவீக்க தாக்கம்

4. மூலதன செலவீனம் எவ்வாறு நிதியீட்டம் செய்யப்பட்டது விளக்குக.

2. "அரசாங்க பாதீட்டின் பற்றாக்குறையின் அளவு ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் நிதியீட்ட முறைகளே முக்கியம் " மேலுள்ள பாதீட்டின் படி இக் கூற்றை விளக்குக?

08) 1. அரசாங்கத்தின் நாணயக் கொள்கை என்பதால் கருதுவது யாது?

2. ஒரு நாட்டினுடைய பணவீக்கத் தாக்கத்துக்கு எதிரான அரசாங்கத்தின் நாணயக்கொள்கையை எவ்வாறு பயன்படுத்த முடியும்.

3. "அரசாங்க பாதீடானது சேமிப்பை கொண்டிருக்குமாயின் அது நல்ல பாதீட்டு சுட்டெண்ணாக " குறிப்பிடப்படும் ஏன் ஒரு பொருளாதாரத்தில் சேமிப்பானது உருவாக்கப்படவேண்டும் என்பதை விளக்குக?

4. அரசாங்க வரிக்கும் அரசாங்க சேவைகளுக்கும் இடையில் எதிர்க்கணிய தொடர்பு உண்டு இக் கூற்றை விளக்குக.

---

தரம் 13
Grade 13

## க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை
## Pilot Examination

ஆனி 2008
June 2008

பொருளியல் - II-I
Economics -II-I

1 மணித்தியாலம்
1 Hour

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

(01) செலவு தூண்டல் பணவீக்க கோட்பாட்டின் படியான MV=PT என்னும் சமன்பாட்டில்

1) V ஒரு மாறிலி
2) Vன் மாற்றங்கள் Mல் ஏதாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்
3) Mல் ஒரு மாற்றம் Pல் விகிதசமமான மாற்றத்துக்கு இட்டுச்செல்லும்
4) PTல் மாற்றம் MVல் ஒரு மாற்றத்தை தூண்டும்
5) MVம் PTம் ஒன்றுக்கொன்று தொடர்பற்றது.

(02) வங்கித்துறையில் எல்லா வங்கிகளும் 20% வைப்புக்களை காசாக பேணும் ஒரு வங்கி புதியவைப்பாக ரூ 200/- மி.பெற்றுக்கொண்டது அதனைத் தொடர்ந்து வங்கி முறையில் தேறிய காசு மீளப் பெறுகைகள் பூச்சியம்.

வங்கி முறைமையினுள் வைப்புக்களின் இறுதி அதிகரிப்பு என்னவாக இருக்கும்

1. ரூ. 20/- மி 2. ரூ. 200/-மி 3. ரூ. 800/-மி
4. ரூ. 1000/-மி 5. ரூ. 4000/-மி

(03) வங்கி வைப்புக்களில் பொது மக்களினால் விரும்பப்படும் காசு விகிதத்தில் ஓர் அதிகரிப்பை தூண்டுவது போன்று அமைவது எது?

1. வங்கி திறக்கும் நேரங்களில் ஓர் நீடிப்பு
2. காசு வழங்கும் இயந்திரங்களின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பு
3. கடன் அட்டைகளின் பாவனைகளுக்கான வருடாந்த கட்டணங்களை அறிமுகம் செய்தமை
4. வைப்பில் இடும்போதே தெரியக்கூடியதான வட்டியை வழங்குதல்
5. வட்டிவீதத்திலான ஓர் அதிகரிப்பு

(04) பணத்தின் எந்தப்பண்பானது அது மாற்றூடகமாக பயன்படுத்துவதற்கு அததியாவசியமானது.

1. நீண்ட பாவனையை உடையதாக இருத்தல் வேண்டும்
2. சட்டபூர்வமான ஆவணமாக இருத்தல்
3. நிரம்பல் வரையறுக்கப்பட்டது.
4. உண்மைப் பெறுமதியை கொண்டிருத்தல்
5. திரவத்தன்மை முன்னுரிமையை கொண்டிருக்கும்

(05) பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக நாணய அதிகாரிகள் வட்டிவீதத்தை அதிகரிக்கின்றனர். இதன் விளைவாக என்ன அதிகரிப்பு ஏற்படக்கூடும்.

1. நிறுவனங்களின் விற்பனை வருமானம் 2. முதலீட்டு செலவீனம்
3. தேறிய மூலதன வெளிப்பாய்ச்சல் 4. நாணய மாற்றுவீதம் 5. பணநிரம்பல்

(06) 1ஆம் வருடத்துக்கும் 2ஆம் வருடத்துக்கும் இடையில் ஒரு நாட்டினுடைய ஏற்றுமதி விலைசார் 6% இனாலும் இறக்குமதி விலைகள் 8% ஆலும் அதிகரித்தும் காணப்பட்டது. 2ஆம் வருடத்துக்கான நாட்டினுடைய வர்த்தகநிலுவை சுட்டி யாது? (1ஆம் வருடம் =100)

1. 75.0 2. 87.0 3. 114.9 4. 133.3 5. 92.5

(07) ஒரு நாட்டினுடைய வர்த்தக நிலுவை பற்றாக்குறை அதிகரிப்பினால் அதிகம் ஏற்படலாம் என எதிர்பார்க்கும் விளைவு யாது?

1. தேசிய வருமானத்தில் அதிகரிப்பு
2. பணநிரம்பலில் ஓர் அதிகரிப்பு
3. பணவீக்கத்தில் ஓர் அதிகரிப்பு
4. வேலையின்மை மட்டத்தில் ஓர் குறைப்பு
5. பணநிரம்பலில் ஓர் அதிகரிப்பு

(08) ஒரு நாட்டினுடைய நாணயமாற்று வீத பெறுமதி இறக்கத்தின் விளைவு யாது?

1. இறக்குமதிகளின் வெளிநாட்டு நாணயவிலை அதிகரிக்கும்
2. இறக்குமதிகளின் உள்ளூர் நாணய விலையில் ஓர் குறைவு
3. ஏற்றுமதிகளின் உள் நாட்டு நாணய விலையில் ஓர் குறைவு
4. ஏற்றுமதிகளின் வெளிநாட்டு நாணய விலையில் ஓர் அதிகரிப்பு
5. ஏற்றுமதிகளின் வெளிநாட்டு நாணயவிலைகளில் ஓர் அதிகரிப்பு

(09) ஒப்பீட்டு நன்மை கோட்பாட்டின்படி பின்வருவனவற்றுள் எந்த ஆரம்ப நிபந்தனைகளின் கீழ் சர்வதேச வர்த்தகத்தின் பலன்களை ஒரு நாடு அனுபவிப்பதற்கு இயலாதுள்ளது.

1. ஒரு நாடு அதன் சென்மதி நிலுவையின் பற்றாக்குறையை கொண்டுள்ள போது
2. ஒரு நாடு எல்லாப் பொருளின் உற்பத்தியிலும் ஒரு நிச்சயமான உயர்வு நிலையை கொண்டுள்ள போது
3. தனியுரிமையினாலும் வரியினாலும் வெளிநாட்டுவிலைகள் திரிபுபடுத்தப்பட்டுள்ள போது
4. ஒரு நாட்டில் உள்ள விலை விகிதங்கள் உலகில் உள்ள ஏனைய நாடுகளில் உள்ளது போன்ற எல்லாவகையிலும் ஒத்தாக இருக்கும் போது
5. அமையச் செலவு நாடுகளுக்கிடையிலும் உலகின் ஏனைய நாடுகளுக்கிடையிலும் வேறுபடும் போது.

(தொடரும்)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை
Pilot Examination
ஆனி 2008
June 2008


தரம் 13
Grade 13

உயிரியல் – (பகுதி II )
Biology -(Part II)

1 மணித்தியாலம்
One Hour

(நேற்றைய தொடர்ச்சி)

(03) B) மனித சூல் வித்தகத்தின் அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது?




1) a,b,c,d,e ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
a.............................. b..............................
c.............................. d..............................
e ..............................

2)எக் குருதிக் கலன்
i) சிசுவிற்கு ஒட்சிசனையும் போசணையையும் கொண்டு செல்கின்றது?
..............................................................................
..............................................................................

ii) சிசுவிலிருந்து காபனீரொட்சைட்டையும் யூரியாவையும் வெளியே கொண்டு செல்கின்றது?
..............................................................................
..............................................................................

3)சூல்வித்தகத்தின் ஆக்கத்தில் பங்குகொள்ளும் முளைய மென்சவ்வுகள் எவை?
..............................................................................
..............................................................................

4)கருத்தரித்த காலத்தில் மனித சூல்வித்தகத்தால் சுரக்கப்படும் ஓமோன்களைத் தந்து அவற்றின் பிரதான தொழில் ஒன்றையும் தருக.

| ஓமோன் | தொழில் |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

C) 1) குழந்தை பிறந்த உடன் அதிக மாற்றத்திற்குள்ளாகும் அங்கத் தொகுதி யாது?

2)பிறப்பின் போது குழந்தையின் நுரையீரல்கள் விரிவதற்கு உதவும் இரசாயனப் பொருளிற்கு எப்பெயர் வழங்கப்படுகின்றது?

3) மனிதனில் சுவாசமையம் எங்கு அமைந்துள்ளது?

4) மனித சுவாசத் தொகுதியின் மூன்று தொழில்களைத் தருக?

D) 1) a) மனிதனின் சுருங்கல் அமுக்கம் என்பதிலிருந்து விளங்கிக் கொள்ளப்படுவது யாது?

b) ஆரோக்கியமான ஒருவரின் சாதாரண சுருங்கல் அமுக்கம் யாது?

2) நாடிக்குருதி அமுக்கத்தை சாதாரண மட்டத்தினுள் பேணுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் மூன்று தருக?

3)இதயத்துடிப்பு வீதம், வலிமை என்பவற்றை அதிகரிக்கச் செய்யும் இரு ஓமோன்களைப் பெயரிடுக?

4) இதயத்துடிப்பு நிரோதிக்கும் மையங்களைத் தூண்டும் செய்திகளை அனுப்பும் அமுக்கவாங்கிகள் அமைந்திருக்கும் இடத்தைத் தருக?

5) மாற்றுப் பாதை சத்திரசிகிச்சை மூலம் எக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படுகின்றது?

(04) A)1)உணவைப் நற்காப்பு செய்ய வேண்டியதற்கான காரணங்கள் இரண்டு தருக?

2)உணவை நற்காப்புச் செய்யும் முறைகள் தொடர்பான அடிப்படைத் தத்துவங்கள் மூன்று தருக?
a)..............................................................................

3)பின்வரும் உணவு நற்காப்பு தொடர்பான அடிப்படைத் தத்துவங்கள் யாவை?
a) மீன்களைத் தகரத்திலடைத்தல் ..............................
b) கட்டிப்பால் தயாரித்தல் ..............................
c) பாய்சரேற்றம் செய்யப்பட்ட பால் ..............................

4)தரப்பட்ட விருந்துவழங்கியின் எதிர்ப்பு பொறிமுறையுடன் தொடர்பான எழுத்துக்களை அவற்றுக்கு முன் குறிப்பிடுக.

A - உயிர்பான செயற்கை B - உயிர்பற்ற இயற்கை
C - உயிர்பான இயற்கை D - உயிர்பற்ற செயற்கை
E - இரசாயனத் தடை F - தனித்துவமற்ற

i) Tetanus தடைமருந்து (ஈர்ப்புவலி) ii) கடும்புப் பால்,
iii) உடற்பாயத்துடனான நிரப்பீடணம் iv) இரைப்பையிலுள்ள Hcl
v) கண்ணீரிலுள்ள இலைபோசேசீம்
vi) நடுநிலை நாடிகளின் தொழிற்பாடு
vii)உடல் வீக்கங்கள் தோன்றுதல் viii) Interferon
ix) வாதனாளியிலுள்ள பிசிர்கள்

B) பின்வரும் ஒட்டுண்ணிகளின் தொற்றுப்பருவங்களையும் மனிதவிருந்து வழங்கிக்கு எவ்வாறு கடத்தப்படுகின்றன எனவும் எழுதுக?

| | தொற்றும் பருவம் | கடத்தப்படும் முறை |
|---|---|---|
| 1)Ascaris | .............................. | .............................. |
| 2)Necator | .............................. | .............................. |
| 3) Entamoeba | .............................. | .............................. |
| 4) Wuchereria | .............................. | .............................. |

C) ஓரின வளர்ப்பைவிட பல்லின வளர்ப்பிலுள்ள இரண்டு அனுகூலங்கள் தருக?
..............................................................................
..............................................................................

3)பீடை முகாமைத்துவத்தில் இரசாயனக்கட்டுப்பாட்டை விட உயிரியல் கட்டுப்பாட்டு முறையிலுள்ள அனுகூலங்கள் இரண்டு தருக?
..............................................................................
..............................................................................

4) தென்னையைத் தாக்கும் Coleoptera பீடைகளின் பொதுப் பெயர்களையும் சேதத்தை உண்டுபண்ணும் வாழ்க்கைவட்ட நிலைகளையும் தருக?

| பொதுப்பெயர் | சேதம் விளைவிக்கும் பருவம் |
|---|---|
| a.............................. | .............................. |
| b.............................. | .............................. |
| c.............................. | .............................. |

5) மேற்கூறிய பீடைகளுக்குரிய பொதுவான கட்டுப்பாட்டு முறைகளைத் தருக?
a ..............................................................................
b ..............................................................................
c ..............................................................................

D) 1) நெல்லில் தோன்றும் மூன்று முக்கிய நோய்கள் எவை?
..............................................................................
..............................................................................
..............................................................................

2) a) களைகளின் தாக்கத்தினால் நெற்பயிர்களின் வளர்ச்சி எவ்வாறு தடைப்படுகிறது?
..............................................................................
..............................................................................
..............................................................................

b) பிரதான களைக்கட்டுப்பாட்டு முறைகள் எவை?
..............................................................................
..............................................................................
..............................................................................

3) தாவர இனக்கலப்பு என்பதன் கருத்து யாது?
..............................................................................
..............................................................................
..............................................................................

4) பின்வரும் பதங்களை விளக்குக.
a)தெரிவு செய்யப்பட்ட இனக்கலப்பு
..............................................................................
..............................................................................
..............................................................................

b)கலப்பு பிறப்பாக்கம்
..............................................................................
..............................................................................
..............................................................................

5) சிறந்த கலப்புப்பிறப்பாக்கத்தைப் பெற்றுக்கொள்ள, எடுக்கவேண்டிய முக்கிய நடைமுறைகள் எவை?
a) ..............................................................................
b) ..............................................................................

தரம் 13
Grade 13

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை
Pilot Examination
ஆனி 2008
June 2008

உயிரியல் -(பகுதி- B )
Biology -(Part -B)

2 மணித்தியாலங்கள்
Two Hours

பின்வருவனவற்றிலிருந்து ஏதாவது 4 வினாக்களுக்கு விடையளிக்குக.

(01) a) முதிர்ந்த சைக்கஸ் சூல்வித்தின் அமைப்பை சுருக்கமாக விபரிக்குக.
b) சைக்கஸ் சூல்வித்தில் நடைபெறும் மகரந்தச்சேர்க்கை, கருக்கட்டல், கருக்கட்டலுக்கு பிந்திய மாற்றம் என்பவற்றை விளக்குக.
c) சைக்கஸ் இனப்பெருக்கத்தில் காட்டப்படும் கூர்ப்பில் முன்னேற்றமடைந்த இயல்புகளை அட்டவணைப்படுத்துக.

(02) a) மனித சிறுநீரகத்தின் அமைப்பை விளக்குக?
b) சிறுநீர் உற்பத்தியில் அதன் ஒவ்வொரு பகுதியும் ஆற்றும் தொழில்களை விபரிக்கு?

(03) a) "இயற்கை வளங்கள்" என்னும் எண்ணக்கருவை விளக்கி அவற்றின் நீடித்து நிலைக்கும் பயன்பாடு பற்றிக் குறிப்பிடுக?
b) மனிதனது நடவடிக்கைகளும் பிரதான வளங்களின் சீரற்ற முகாமைத்துவமும் சுற்றாடல் தரங்குறைவடைதலுக்கு எவ்வாறு இட்டுச் செல்கின்றன என விளக்குக?

(04) பின்வரும் செயற்பாடுகளை சுருக்கமாக விபரிக்க.
a) i)நுண்ணங்கியியலில் தொற்றுநீக்கல்
ii) நிர்ப்பீடனம்
b) நீரினால் பரவும் நான்கு நோய்களையும் அவற்றுக்கு காரணமான நுண்ணங்கிகளையும் குறிப்பிடுக.
c) நகரசபை நீர்ச்சுத்திகரிப்பின் பிரதான படிகளை விளக்குக.

(05) a) பாரம்பரியம் தொடர்பான மெண்டலின் முடிவுகளை விளக்கி பரம்பரை இயல்பு தொடர்பான நிறமூர்த்தக் கொள்கையுடன் அவற்றைத் தொடர்புபடுத்துக?
b) <u>Pisum</u> <u>sativum</u> தாவரத்தின் வித்தின் இயல்புகளைக் கருத்தில் கொண்டு துவிக்கலப்புப் பிறப்பாகத்தில் எதிர்பார்க்கப்படும் தோற்ற அமைப்பு விகிதத்தை பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தி விளக்குக?
c) ஒரே நிறமூர்த்தத்தில் காணப்படும் இரண்டு ஆட்சியான பரம்பரை அலகுகள் கருத்தில் கொள்ளப்பட்டால் தோற்ற அமைப்பு விகிதம் யாதாக இருக்கும்?

(06) பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக?
a) உரியக் கடத்தலில் திணிவுப் பாய்ச்சல் கொள்கை
b) ஒட்டுதல் ஒரு பதிய முறை இனப்பெருக்க முறையாக
c) மனிதனில் புரதச் சமிபாட்டுச் செயன்முறைகள்

# கிழக்கைப் போல் வடமத்திய மாகாணத்தையும் ஆயுத முனையில் அபகரிக்க அரசு முயற்சிக்கின்றது

## ஐ.தே.க.எம்.பி. ஹரிசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை ஆயுத முனையில் அபகரித்துக் கொண்ட அரசாங்கம் அதே வியூகத்தைப் பயன்படுத்தி வட மத்திய மாகாணத்தையும் அபகரித்துக்கொள்வதற்கான முறைகளைக் கையாண்டு வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அநுராதபுரம் மாவட்ட எம்.பி. யும் வட மத்திய மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கை குழு உறுப்பினருமான பி. ஹரிசன் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளைத் தூண்டிவிட்டு எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு இடையூறுகளை விளைவிப்பதோடு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களுக்கு பகிரங்கமான மரண அச்சுறுத்தலும் விடுக்கப்படுகின்ற அரச பயங்கரவாதமே அங்கு தலை விரித்தாடுகிறது என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஹரிசன் எம்.பி. மேற் கண்டவாறு கருத்துரைத்தார்.

இங்குஅவர்மேலும்கூறுகையில், ஜனநாயகம் வலியுறுத்தப்படுகின்ற இலங்கை நாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் அதனை இல்லாது செய்து கொண்டிருக்கின்றது.

மோசடிகளுக்குப் பழகிப் போயுள்ள அரசாங்கத்திற்கு அதனை கட்டுப்படுத்திக் கொள்ளவோ அல்லது இல்லாமல் செய்து விடுவதற்கோ அருகதை இல்லை.

ஜனநாயகம் நிலைநாட்டப் படுவதற்காகவே கிழக்கில் தேர்தலை நடத்துகிறோம் என்று கூறிய அரசாங்கம் அங்கு ஜனநாயகத்தை புதைத்து அராஜக வழியிலும் ஆயுத முனையிலுமாக தேர்தலை நடத்தி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

இன்றைய நிலையில் அரசுக்கு அவசியமாக இருப்பது அதிகாரம் மட்டுமேயாகும். அதனை தக்கவைத்துக்கொள்ள எதனையும் செய்ய அரசாங்கம் துணிந்திருக்கின்றது.

வடமத்திய மாகாணத்தில் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள இன்றைய நிலையில் அரசு தரப்பில் இருந்த பாரிய அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் வட மத்திய மாகாண சபைக்கான முதன்மை வேட்பாளர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்கான பாதுகாப்பை வழங்குவதில் அரசாங்கம் இது வரையில் தனது அக்கறையைக் காட்டவில்லை.

பிள்ளையானின் ஆயுதக் குழு, புலிகளின் மற்றும் அரச தரப்பின் குண்டர் குழு ஆகிய தரப்பில் இருந்து மரண அச்சுறுத்தல்களை எதிர் கொண்டிருக்கும் ஜானக பெரேராவுக்கு பாதுகாப்பு வழங்கப் படாமை அடிப்படை மனித உரிமை மீறல் ஆகும்.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மூன்று வாரங்களுக்கு மேலாக வலியுறுத்தி வருவது அரசாங்கத்தின் காதில் விழாமல் இல்லை. ஆனால் அரசாங்கம் இதனை வேண்டுமென்றே நிராகரித்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து அநுராதபுரத்தைக் காப்பாற்றியவர் ஜானக பெரேரா ஆவார். இந்நாட்டுக்கு தன்னை அர்ப்பணித்தவருக்கு பாதுகாப்பை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அரசு தொடர்ந்து தவறிழைத்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான நடவடிக்கைகள் ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பணிகளை குழப்பியடித்து ஒரு வித அச்சத்துக்கு ஆட்படுத்துகின்றன. சூழ்ச்சித்தனமான நடவடிக்கையாகும். இதனை ஐக்கிய தேசியக் கட்சி வெறுக்கின்றது. அத்துடன் தனது பலத்த எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்கின்றது.

கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் ஆயுத முனையில் கைப்பற்றிக் கொண்டதே தவிர அது ஜனநாயக முறையில் நடைபெற்ற தேர்தல் அல்ல என்பது நாடறிந்த உண்மையாகும். அதே பாணியில் வட மதத்திய மாகாணதததையும ஆயுத அராஜகத்தின் ஊடாக கைப்பற்ற அரசு தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. பெரும்பான்மைப் பலம் போதாது என்ற காரணத்தின் அடிப்படையிலேயே சப்ரகமுவமற்றும் வட மத்திய மாகாணசபைகள் கலைக்கப்பட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. அப்படியானால் தென்மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் மேல் மாகாணங்களுக்கு போதிய அதிகாரங்கள் இருக்கின்றதா என்பதை அரசாங்கத்திடம் கேட்கிறோம்.

உரமானியம் என்று அரசாங்கம் விவசாயிகளை ஏமாற்றியுள்ளது. நிவாரணம் என்று கூறிய அரசாங்கம் அதனை இல்லாமல் செய்திருக்கின்றது. மாறாக விலைவாசி அதிகரிப்பும் வரிச்சுமையும் வாழ்க்கைச் சுமையுமே மீதமாகியுள்ளது.

இதுவரை காலம் வட மத்திய மாகாண கல்வி அமைச்சராக இருந்த முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திசாநாயக்க அம் மாகாணத்தின் கல்வி வளர்ச்சி குறித்து அக்கறைப் படாதிருந்தால் இன்று கீழ் மட்டத்தை அடைந்திருக்கின்றது.

யுத்தப் பிரதேசமான வட மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் விட மிக மோசமான நிலையில் பின்தங்கிய நிலைக்கு கொண்டு சென்றவர் பேர்டி பிரேமலால் என்பவரே ஆவார்.

மீண்டும் அந்த மாகாணம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் செல்லுமானால் அம் மாகாணத்தின் கல்வி வீதத்தின் வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது.

அரசாங்கத்தின் பிடியில் இருந்து வட மத்திய மாகாணம் மட்டுமல்லாது இந்த நாடே விடுபட வேண்டும். அப்போது தான் மக்களுக்கும் விமோசனம் கிடைக்கும்.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதன் மூலமே இந்த நாட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதே வேளை வட மத்திய மாகாண சபைக்கான எமது முதன்மை வேட்பாளர் ஜானக பெரேரா வுக்கான பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்தை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஞாபகப்படுத்துகிறது.

இதனை உதாசீனப் படுத்தி அவரது உயிருக்கு பாதகம் ஏற்படுமானால் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பாளியாவார். ஓ


# 31 ஆம் நாள் நினைவுகள்

27.06.2008 அன்று சிவபதமடைந்த

## சண்முகம் கணேசலிங்கம்



பிறையாயிரம் கண்ட எங்கள்
தோழனே
நிறைவாழ்வு வாழ்ந்ததிங்கு
போதுமென்றா நீங்கள்
திரையிட்டு திடீரென தனிப்பய
ணம் சென்றீர்கள்
ஆசானாய் எமக்கு வழிகாட்டிய
நண்பா
இறைவனடி சேர்ந்தீரோ எமைப்
பிரிந்து

*இவரது ஆத்மா சாந்தியடையவும் இவரது குடும்பத்தினர் அமைதி பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் துயருறும் நண்பர்கள்
மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம்,
திருநெல்வேலி.

1489


# நெல்சன் மண்டேலாவுக்கு மகாத்மா காந்தி விருது

(டர்பன்)

அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான மகாத்மா காந்தி சர்வதேச விருது தென்ஆபிரிக்கா தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா டர்பனில் உள்ள மகாத்மா காந்தி அறக் கட்டளை மற்றும் சத்தியாகிரக அமைப்பே அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான மகாத்மா காந்தி சர்வதேச விருதை நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கியுள்ளது. தியாகத்தாலும் பங்களிப்பாலும் உலக மக்களின் மனதில் இடம் பிடித்தார் என்றும் அவர் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடந்த விருது வழங்கும் விழாவில் மண்டேலா கலந்து கொள்ளவில்லை விருதை அவருக்கு பதிலாக அவரது சிறைத் தோழரும் அரசியல் ஆலோசகருமான அகமது



ராடா பெற்றுக் கொண்டார். கடந்த வெள்ளிக்கிழமையன்றே மண்டேலா தனது 90ஆவது பிறந்த நாளை கொண்டாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# விளையாட்டு விவகாரங்களில் அரசின் தலையீடு ஈராக்கிய வீரர்கள் ஒலிம்பிக்கில் விளையாட தடை

(ஈராக்)

ஈராக்கிய ஒலிம்பிக் குழுவை ஈராக் அரசே வழி நடத்துவதாக கடந்த மாதம் முடிவெடுத்திருந்தது.

ஈராக்கிய அரசு இப்படிச் செய்ததன் மூலம் விளையாட்டு விவகாரங்களில் அந்நாட்டு அரசு அரசியல் ரீதியாகத் தலையிடுவதாக சர்வ தேச ஒலிம்பிக்குழு ஈராக் அரசு மீது குற்றம் சாட்டியது. இந்த முடிவுக்கு மறுப்பு தெரிவித்த சர்வதேச ஒலிம்பிக் குழு ஈராக்கிய வீரர்களுக்கு எதிராக கடந்த மாதம் தற்காலிக தடையை விதித்திருந்தது.

ஈராக்கிய அரசு தனது இந்த முடிவை மாற்றிக் கொள்ள இந்த வாரம் வரை சர்வதேச ஒலிம்பிக் குழு அவகாசம் அளித்திருந்தது.

ஈராக்கிய அரசு தனது முடிவை மாற்றிக் கொள்ளாததன் காரணமாக ஈராக்கிய வீரர்களால் ஒலிம்பிக் போட்டிகளில் போட்டியிட முடியாத சூழல் தோன்றியுள்ளதென சர்வதேச ஒலிம்பிக் குழு ஈராக்கிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. ஓ

# தெற்காசியாவில் அணு ஆயுதப் பரவலும் ,போட்டியும் ஏற்பட வழிவகுக்கும் ஒப்பந்தத்திற்கு அனுமதி அளிக்கக்கூடாது

## குறித்து பாகிஸ்தான் எச்சரிக்கை

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தமானது தெற்காசியாவில் அணு ஆயுதப் பர வலாலும்அணு ஆயு தப் போட்டியும் ஏற்பட வழிவகுக்கும் . எனவே இந்த ஒப்பந்தத்திற்கு அனுமதியளிக்கக் கூடாது என சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திற்கு பாகிஸ்தான் எச்சரிக்கைக் கடித மொன்றை அனுப்பிவைத்துள்ளது.



ஐக்கிய நாடுகள் மற்றும் "சர்வதேச அணுசக்திமுகவர் நிலையத்துக்கான பாகிஸ்தானிய நிரந்தர பிரதிநிதிகளே இந்த எச்சரிக்கைக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர். அந்தக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

இந்த அணுசக்தி ஒப்பந்தமானது இந்தியாவை அணு ஆயுத நாடாக அங்கீகரிக்க வழிவகை செய்கிறது. அத்துடன் அந்நாடு மென் மேலும் பல அணு ஆயுதப் பரிசோதனைகளை நடத்தவும் இந்த ஒப்பந்தம் களம் அமைத்துக் கொடுக்கிறது. அதனால் தெற்காசிய பிராந்தியத்தில் பதற்ற சூழ் நிலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. மேலும் மேற்படி ஒப்பந்தத்தில் விதிவிலக்கு சலுகையை அளிக்க வேண்டும் என இந்தியா கோருவது ஏற்க முடியாத நியாயமற்ற கோரிக்கையாகும் .

சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் விதிமுறைகளின். பிரகாரம் அணுசக்தி தொடர்பான பாதுகாப்பு விபரங்களை உள்ளடக் கிய ஒப்பந்த வரைபின் பிரதி ஆய்வுக்குட்படுத்தப்பட்டு45 நாட்கள் கழித்தே அதனை பரிசீலிக்க அனுமதிக்க வேண்டும் .இதனடிப்படை யில் இந்தியாவின் அணுசக்தி ஒப்பந்த வரைபை எதிர்வரும் ஓகட்ஸ் 25 ஆம் திகதிக்கு முன்னர் பரிசீலனைக்குஎடுத்துக்கொள்ள முடியாது.

ஆனால் மேற்படி இந்திய அணுசக்தி ஒப்பந்த வரைபானது எதிர் வரும் ஓகட்ஸ் மாதம் முதலாம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவ தாகச் செய்திகள் வெளியாகி வருகின்றன. அணுசக்தி விதிமுறைகளை இந்தியாவுக்காக மாற்ற முயற் சிப்பது ஏற்றுக் கொள்ள கூடிய ஒன்றல்ல. அனைத்து உறுப்பினர்களும் மேற்படி ஒப்பந்த நகலை முழுமையாக வாசித்தறிய அவகாசம்வழங்கப்பட வேண்டும். இதில் அவசரம் காட்டு வது ஆபத்தில் முடியும்.

மேற்படி அணுசக்திப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நிபந்தனைகள், இந்தியாவுக்கு அந்த ஒப்பந்தத்தில் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கப்பட்ட அனுமதி போன்ற விடயங்கள் ஏற்றுக் கொள் ளக் கூடியன அல்ல.

இந்த ஒப்பந்தமானது பொது மக்களுக்கான சக்தி வள பயன்பாட்டிற்கு என்ற போர்வையில் இந்தியா பெருமளவு அணுசக்தி எரிபொருட்களை கொள்வனவு செய்து, பின் னர் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட வழிவகை செய்து தருகிறது.

இந்தியா அணு ஆயுதச் சோதனையை நடத்தும் பட்சத்தில், உடனடியாக ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான எச்சரிக்கை ஒப்பந்த ஆவணத்தில் காணப்படாமை காரணமாக,இந்தியா அணு ஆயுத பரிசோதனைகளை முன்னரைவிட அதிகளவில் மேற்கொள்ள இந்த ஒப்பந்தம் வழியேற்படுத்தி தருகிறது என அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பாகிஸ்தானின் அச்சமானது அநாவசியமான ஒன்றென இந்தியாவும் அமெரிக்காவும் மறுப்புத் தெரிவித்துள்ளன. இது தொடர்பில் இந்திய வெளி யுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி விபரிக்கையில், இந்த ஒப்பந்தமும் முற்று முழுதாக அணு சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிப்பது தொடர்பானது. இராணுவ நடவடிக்கைக்கும். இந்த ஒப்பந்தத்திற்கும் எது வித தொடர்பு மில்லை என்று கூறினார். (ஓ)

சேற்றில் உள்ள முள்ளும் வேட்டை நாயின் பல்லும் மூடனுடைய சொல்லும் அதிகமாய் குத்தும்.

–அயர்லாந்து

வலம்புரி

## ஐரோ.ஒன்றிய நாடாளுமன்றக் குழுவின் குற்றச்சாட்டின் எதிர் விளைவு என்ன?

இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழு திட்டமிட்டபடி கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொள்ள முடியாமல் போயிற்று.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான விஜயத்தில் கிழக்கு மாகாணத்திற்கான பயணம் முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது.

எனினும், ஐரோப்பிய ஒன்றிக்குழு கிழக்கு மாகாணத்திற்குச் செல்ல அரசு அனுமதி மறுத்துவிட்டதாக அந்தக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டை நிராகரித்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம, ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக்குழு பொறுப்பற்ற முறையில் நடந்துள்ளதாகவும் கிழக்கு மாகாணத்திற்கு அவர்கள் விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டிருந்தபோதிலும், விமான நிலையத்தில் அக்குழுவினர் காத்திருக்காது புறப்பட்டு விட்டதனால் அவர்களின் கிழக்கு விஜயம் தடைப்பட்டுப்போனதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய தூதுக்குழு இலங்கை அரசு மீதும், இலங்கை அரசு ஐரோப்பியத் தூதுக்குழு மீதும் மாறிமாறி குற்றம் சுமத்தியுள்ளன.

இதில் யார் பொய்யுரைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன்பாக ஈழத்தமிழர்கள் தமக்கு இருக்கக்கூடிய மிகப்பெரியதொரு சந்தேகத்தைக் கேட்கின்றனர்.

அதாவது இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழு தனது விஜயத்தின் மூலமாக எதனைக் கண்டறியவந்தது. அவ்வாறு தாம் கண்டறிந்தவை இலங்கை அரசின் நியாயமற்ற செயற்பாடு என இன்னங் கண்டிருப்பின் அதற்காக அவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதே தமிழ் மக்களின் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கும் கேள்வியாகும்.

இந்தக் கேள்விக்கு ஐரோப்பிய ஒன்றியம் சரியான பதிலை தந்தாகவேண்டும்.

ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவினர் தாம் கிழக்கிற்குச் செல்வதற்கான அனுமதியை அரசு தர மறுத்துவிட்டதெனக் கூறுகின்றபோது,அது தவறு; அந்தக்குழு பொறுப்பற்று நடந்து கொள்கின்றது என்றெல்லாம் இலங்கை அரசு குற்றம் சாட்டுகிறது.

எனவே இப்போது யார் பொய்யுரைக்கிறார்கள் என்பதை ஐரோப்பியத் தூதுக்குழு அறிந்து கொண்டிருக்கும்.

அவ்வாறாயின் இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஏதேனும் அந்தக் குழுவுக்கு உண்டா? அல்லது இலங்கை விஜயம்–ஈழத்தமிழர் பிரச்சினை என்பன அவர்களுக்கு பொழுதுபோக்கா? இங்குதான் தமிழர் சந்தேகம் எழுகை பெறுகிறது.

இது நியாயமானதும் ஏற்புடையதும் என்பதை உரிய தூதுக்குழு ஏற்றாகவேண்டும்.

# தெற்காசியாவில் இராணுவ நடவடிக்கையிலும் பார்க்க உணவுப் பற்றாக்குறையால் மக்கள் அதிக பாதிப்பு

## தெற்காசிய கொள்கைக்கான அமைப்பு தகவல்

(கொழும்பு)

வன்முறைக்ள் நிறைந்த பிராந்தியமாக தெற்காசியா காணப்படுகின்றது.

இங்கு இராணுவ நடவடிக்கைகளை விட உணவுப் பற்றாக் குறையினாலும் பட்டினியாலுமே மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் என்று தெற்காசிய கொள்கைக்கான அமைப்பு தெரிவித்தது.

தெற்காசிய நாடுகள் இராணுவ பாதுகாப்பை விட உணவுப் பாதுகாப்பிற்கே அதிகமான நிதி ஒதுக்கீட்டை செய்யவேண்டும் என்று அவ் அமைப்பு பரிந்துரை செய்துள்ளது.

மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சார்க் நாடுகளின் தூதுவர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெற்காசிய கொள்கைக்கான அமைப்பு மேலும் கூறியது.

கடந்த 22முதல் 24ஆம் திகதி வரை கண்டியில் நடைபெற்ற தெற்காசிய கொள்கை அமைப்பில் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு நகரோதய நிலையத்தில் நடைபெற்றது.

அதில் தெற்காசிய கொள்கை அமைப்பின் தலைவர் கலாநிதி குவாஸி கோலி குவாஸம் அஹமட் உறுப்பினர்களான கலாநிதி அபித்தாபி றஷீட் அல் மஹ்மூட் ஆகியோர் கலந்துகொண் டனர்.

அங்கு கருத்துத்தெரிவித்த தெற்காசிய கொள்கை அமைப்பின் உறுப்பினர்கள் மேலும் கூறியதாவது,

சுதந்திரம் பெண்கள் மற்றும் சிறுபான்மையினரை வலுப்படுத்துதல், பொருளாதாரம் சமத்துவம் ஜனநாயகம் போன்ற விடயங்களில் தெற்காசிய நாடுகள் அர்ப்பணிப்புடன்செயற்படவேண்டும் என மீள் உறுதி செய்யப்பட்டது.

தெற்காசிய பிராந்தியத்தில் வன்முறைகள் மிகவும் அதிகரித்துள்ளன. இதனால் அபிவிருத்தித்திட்டங்களும் மனித வள அபிவிருத்தியும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. எனவே தெற்காசியப்பிராந்தியத்தில் அபிவிருத்தி வெற்றிகரமானதாக அமைய வேண்டுமானால் வன்முறைகள் குறைக்கப்பட வேண்டும். அத்தோடு மனித உரிமைகளின் நிலை மேம்படுத்தப் பட வேண்டும். இதற்கு பிராந்திய மனித உரிமை அமைப்பொன்று ஏற்படுத்தப் படுவதோடு, தேசியமனித உரிமைநிறுவனங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

பிராந்தியத்தில் இராணுவ நடவடிக்கைகளைவிட உணவுப் பற்றாக்குறை பட்டினி என்பவற்றாலேயே மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. எனவே பாதுகாப்பு மற்றும் இராணுவத் துறைக்கு ஒதுக்கப்படுவதை விட உணவுப்பாதுகாப்புக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்படவேண்டும். மனித உரிமை கள், நல்லாட்சி, சமாதானம், நீதி பொருளாதார முகாமைத்துவம் கல்வி, உணவு, விவசாயம், இயற்கை வள முகாமைத்துவம், காலநிலை மாற்றம் அனர்த்த முகாமைத்துவம் உள்ளிட்ட துறைகளை வலுப்படுத்தும் வகையில் பிராந்திய நாடுகள் செயற்பட்டு அபிவிருத்தியை நோக்கிச் செல்லவேண்டும். தெற்காசிய கொள்கை அமைப்பின் 3 நாள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பருந்துரைகள் அடங்கிய கண்டிப்பிரகடனம் கொழும்பில் உள்ள தெற்காசிய நாடுகளின் தூதுவர்களுக்கு கையளிக்கப்படும். ஓ

# தொலைபேசிகளுக்கு அனுமதிப்பத்திரம் மக்களுக்கு தொல்லை கொடுக்கும் சட்டம்

## ரத்துச் செய்யக் கோருகிறார் ஐ.தே.க.மைக்கல் பெரேரா

(கொழும்பு)

கையடக்கத் தொலை பேசிகளுக்கும் சி.டி.எம்.ஏ.தொலைபேசிகளுக்கும் அனுமதிப்பத்திரம் பெற வேண்டும் என்பது எந்த நாட்டிலும் இல்லாத ஒரு சட்டமாகும். இந்த நடைமுறையினை அரசாங்கம் உடனடியாக ரத்துச் செய்யவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதம கொறடாவான ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி.சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சிறப்புக்கூற்று ஒன்றை முன்வைத்து பேசுகையிலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது தொடர்ந்து பேசிய ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி. மேலும் கூறுகையில்

இலங்கையில் 70 இலட்சத்து 83 ஆயிரம் கையடக்கத் தொலை பேசிகளும் 18இலட்சத்து 10ஆயிரம் சி. டி. எம். தொலைபேசிகளும் பயன்படுத் தப்படுகின்றன. கிராமப்புற மக்களும் சிறு தொழிலில் ஈடுபடுவோரும் இவற்றை பயன்படுத் துகின்றனர். இந்நிலையில் பயன்படுத்தப்படும் அத்தனை தொலைபேசிகளுக்கும் அனுமதிபெற வேண் டும் என்பது மனித உரிமை மீறலாகும்.

எனவே மக்களின் மீது புதிது புதிதாக புகுத்தப்படுகின்ற சட்ட திட்டங்களை எதிர்க்கட்சி என்ற வகையில் ஏற்றுக் கொள்ள முடியாது இதனை உடனடியாக அரசாங்கம் ரத்துச் செய்ய வேண்டும் பாதுகாப்பு பிரச்சினையை முன்வைத்தே அரசாங்கம் இப்படியான பிரச்சினைகளை முன்வைத் திருக்கின்றது. உண்மையில் தொலை பேசிகளை பரிசோதித்துக்கொண்டிருக்கும் வேளையில் படையினருக்கு வேறு தேவைகள், கடமைகள் இருக்கின்றன. குறித்த நேரத்தில் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளவும் அதேநேரம் குற்றவாளிகள் தங்களது தேவையை நிறைவு செய்யவும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

ஆகவே, அரசாங்கம் ஆக்கபூர்வமானநடவடிக்கைகளை முன்வைப்பதே சிறந்ததாகும். சட்டத்துக்கு முரணான சட்டங்களை திணித்து மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்குவதை நிறுத்திக் கொள்ளவேண்டும். ஓ


**குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா -02.08.2008**

**இரத்தானம் உயிர் காக்கும் உன்னத பணி**

27.07.2008



குருதிக்கொடையாளர்கள் ஆரோக்கியமானவர்களாகவும் உடல் நிறை 50 கி.கிற்கு மேற்பட்டவராகவும் வயது 18–60 வரையிலும் இரத்த தானம் வழங்குவதற்கு சில மணிநேரங்களுக்குள் உணவு உட்கொண்ட வராகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலரும் எவ்வித பாதிப்பும் இல்லாது 4 மாதத்திற்கு ஒரு தடவை இரத்த தானம் செய்யலாம்.

*இரத்தவங்கி,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

தொ.பே. 021 222 3063


# இறையாட்சி விலைமதிப்பில்லாதது

உலகில் உள்ள ஒவ்வொன்றும் இன்னொன்றைத் தேடி நாடி அதை அடையும் வரை ஓய்வது இல்லை. இந்தத் தேடலிலே வரும்தடைகளையும் இடர்களையும் தாங்கிக் கொண்டு அந்தத் தேடலின்முழுமையை அடைய அனைத்தையும் இழக்கத் தயாராகின்றன. அதைப் போலவே இறையைத்தேடும் ஆன்மாவும் இறைவனின் சங்கமமாகத் தேடுகின்றது. சங்கமம் ஆகும் பட்சத்தில் அந்த ஆன்மாவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

மேலான ஒன்றைப் பெற கீழான பலவற்றை இழக்க வேண்டும். பெண்ணின் அன்பைப் பெற மனதைப் பறிகொடுக்க வேண்டும். தேர்விலே வெற்றி பெற தூக்கத்தை இழக்க வேண்டும். தாய் குழந்தையைப் பெற தன் சுகங்களை இழக்க வேண்டும். விண்ணை அடைய மண்ணைத் துறக்க வேண்டும். இதையே இயேசுவும் செய்தார். உலகம் மீட்புப் பெறதன் உயிரை இழந் தார். மானிடம் வாழ்வு பெற தன் மகனை இழந்தாள் மரியாள்.

எனவே இறையாட்சி எனும் புதையலைப் பெற இறையாட்சிக்கு தடையாயிருக்கின்ற சில செயல்களை அழித்தாக வேண்டும்.

அன்பைப் பெற – பகைமையை அழிக்க வேண்டும்,அமைதியைப் பெற – ஆரவாரத்தை அழிக்க வேண் டும், நீதி வாழ – அநீதி அழிய வேண்டும், வாய்மை அடைய – பொய்மை அழிய வேண்டும். அருளைப் பெற – ஆணவத்தை அழிக்க வேண்டும்.

இது தான் இன்றைய நற்செய்தி

**பரமபிதா காட்டிய பாதை**

யின் மையக் கருத்து. ஒன்றை இழக்கின்ற போது அல்லது அழிக்கின்ற போது தான் இன்னொன்றை அடைய முடியும். இயேசு சொல்கிறார், "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது அப்படியே இருக்கும், மடிந்தால் தான் அது மிகுந்த பலன் தரும். ஏனெனில் தன்னைக் காத்துக் கொள்ள விரும்புபவன் அதை இழந்து விடுவான். தன்னை இழப்பவனோ அதைக் காத்துக்கொள்வான். பூ தன்னை இழந்தால் தான் காய் வரும், காய் தன்னை இழந்தால் தான் கனி கிடைக்கும், வாழை மரம் அழிந்தால் தான் வாழைக் கன்று வளர முடியும்.

அது போல இறையாட்சி இன்று



மலர இதயங்கள் ஒன்று சேர வேண்டும். இதயங்கள் ஒன்று சேர வேற்றுமைகள் மறைய வேண்டும். மனம் மாறாவிடில் மனிதம் மலராது.

இறையாட்சிக்காக நாம் எதை இழக்கப் போகின்றோம்? இழப்பில்லை யேல் இன்பம் இல்லை. விலைமதிப் பில்லா இறையாட்சியை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்றால் அந்த இறையாட்சியின் மதிப்பீடுகளை வாழ்வாக்கி இறையாட்சியை நமதாக்கிக் கொள்வோம்.

ஜோன் றொபேட்

# விலைக்குறைப்புக்கு வழங்கிய மானியம் மூலம் அரசுக்கு ரூபா 4 ஆயிரத்து 885 மில்லியன் இழப்பு

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு வழங்கப்பட்ட மானியங்களின் மூலம் ஜனவரி முதல் மே மாதம் வரை



யான காலப்பகுதியில் அரசாங்கத்துக்கு 4ஆயிரத்து 885 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எம். பி. க்களுக்கான கேள்வி நேரம் முடிந்த பின்னர் சபாநாயகரின் அனுமதியுடன் விஷேட வியாபாரப் பண்ட அறவீட்டு கட்டளைச் சட்ட பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றி அவர் 1970 ஆம் ஆண்டிற்குப் பின்னர் உலகில் இருபாரிய பிரச்சனைகள் உருவாகியுள்ளன. கனிய எண்ணெய், உணவு என்பனவற்றுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளே அவையாகும். உலகளாவிய இந்த நெருக்கடி எமது நாட்டுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல இதனால்வேறுபாடின்றி சகல நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கனிய எண்ணெயின் விலையேற்றம் காரணமாக உணவு நெருக்கடியும் ஏற்பட்டது. கனிய எண்ணெய்க்கு மாற்றீடான உயிரியல் எரிபொருட்களின் உற்பத்திக்காக அமெரிக்கா அதிகமான மானியங்களை வழங்கியது. இதனால் தாவர, விலங்கு உணவுகள் உயிரியல் எரிபொருள் உற்பத்திக்காக பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. இதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு புவி வெப்பமடைதல், கால நிலை மாற்றம் காரணமாக பல நாடுகளில் வழமைக்கு மாறான வரட்சி ஏற்பட்டது. இது உணவு உற்பத்தியில் நேரடியான பாதிப்பை ஏற் படுத்தியது.

விலங்கு இறைச்சி நுகர்வு பாரியளவில் அதிகரித்தமை, விலங்குகளுக்கான உணவுப் பொருட்களிற்கு ( கால் நடை தீவனம் ) ஏற்பட்ட தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு காரணமாக பால்மாவின் விலை அதிகரித்தது.

இவ்வாறு உலகசந்தையில் உணவுப் பொருட் களின் விலைகள் வழமைக்கு மாறாக அதிகரித்தன. இதனால் முன்னர், விவசாய உற்பத்தியைக் கைவிட்டு கைத்தொழில் துறையை ஊக்குவிக்குமாறு வளர்முக நாடுகளை வலியுறுத்திய உலகவங்கி, தற்போது விவசாயத்தை ஊக்குவிக்குமாறும் அதற்கான மானியத்தை அதிகரிக்குமாறும் ஆலோசனை வழங்குகின்றது.

சர்வதேச காரணிகளும், உள்ளூர்க் காரணிகளும் சேர்ந்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைக்கு காரணங்களாக இருந்தன. அரசாங்கம் நாட்டின் மொத்த வருமானத்தில் 50 வீதத்தை அரச ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்கி வருகிறது.

2002 ஆம் ஆண்டு 47பில்லியனாக இருந்த பாதுகாப்பு செலவீனம், தற்போது 100பில்லியன் வரை அதிகரித்துள்ளது. எனினும் இதன் மூலமே கிழக்கை மீட்டு அதனைத் தனியான ஜனநாயக மாகாணமாக உருவாக்கியுள்ளோம்.

சர்வதேச ரீதியில்ஏற்படும் நெருக்கடிகளுக்கு மத்தியில் சம்பளத்தையும், ஓய்வூதியத்தையும் அதிகரித்து மானியங்களையும், சமுர்த்தி கொடுப்பனவுகளையும், கருத்திட்டங்களுக்கு பாரியளவு நிதியையும் ஒதுக்கி வருவதனாலேயே நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

பொருட்களுக்கு விதிக்கப்படும் வரிகள் நேரடியாக அதன் விலையில் சேர்க்கப்படுகின்றன. இதனால் , பொருட்களுக்கு பல வரிகளை விதிக்காமல் ஒரு இணைந்த வரியை விதிக்கும் வகையில் அரசாங்கம் விஷேட வியாபார பண்ட அறவீட்டு கூட்டங்களைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது.

எனினும் அதன் அனுகூலங்களை அறிந்து கொள்ளாது எதிர்க்கட்சிகள் அதனை எதிர்த்தன. தற்போது இறக்குமதி செய்யப்படும் 1 கி. கிராம் பால்மாவுக்கு அரசாங்கம் 86 ரூபா 44 சதத்தை வழங்கி வருகின்றது. இதனால் அரசாங்கத்திற்கு ஒரு மாதத்திற்கு 448. 15 மில்லியன் இழப்பு ஏற்படுகின்றது.

எனினும் பால்மா கம்பனிகள் விலையை அதிகரிக்குமாறு எமது கழுத்தை நெரித்த வண்ணம் உள்ளன. மொத்த சந்தையையும் நெறிப்படுத்தும் பல்தேசிய கம்பனிகள் பால்மாவின் விலையை 25 ரூபாவால் அதிகரிக்க வேண்டுமென கோரிவருகின்றன. பால்மாவிற்கு மானியங்களை வழங்கி இழப்பைத் தாங்கிக் கொண்டு வரும் அரசாங்கம் விலையதிகரிப்புக்கு அனுமதி வழங்க முடியாது.

அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைப்பதற்கு வழங்கப்பட்ட மானியங்களின் மூலம் ஜனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் அரசாங்கத்துக்கு 4ஆயிரத்து 885 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, அரசியல் கட்சிகள் பல்தேசிய கம்பனிகளுக்காகப் பேசாமல் மக்களுக்காகக் குரல்கொடுக்க வேண்டும்.

ஓ

# யால சரணாலயப் பகுதியில் இராணுவத்தினரால் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க முடியவில்லை

## ஐ.தே.க. எம்.பி .ருக்மன் சேனநாயக்கா

(கொழும்பு)

யால சரணாலயப் பகுதியில் புலிகளின் ஊடுருவல்களும் தாக்குதல்களும் அதிகரித்திருக்கின்றன.

ஆனால் அங்கு குவித்து வைக்கப் பட்டிருக்கும் இராணுவத்தினரால் ஒரு பூனையைக் கூட பிடிக்க முடியவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பி. ருக்மன் சேனநாயக்க தெரிவித்தார்.

இயற்கை வளப் பாதுகாப்பு, விலங்கின தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ருக்மன் சேனநாயக்க எம்.பி. மேலும் கூறியதாவது,

வனவள பாதுகாப்பபு தொடர்பில் பாரிய பிரச்சனை நிலவிக் கொண்டிருக்கின்றது. துரதிஷ்டவசமாக வன வளத்திணைக்களம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கப்படுகிறது.

ஊழியர்களுக்கான சலுகைகள முதல தாவர மற்றும் விலங்குகள் பாதுகாப்பில் அக்கறை காட்டப்படுவது மிகக் குறைவாக இருக்கின்றது.

தாவரங்களை உற்பத்தி செய்து கொள் வது இலகுவாகும். ஆனால் விலங்கினம் [illegible]வடைந்தால் அதனை ஈடுசெய்வது கடினம். சில வேளைகளில் முடியாத காரியமாகவும் அமையலாம்.

யால விலங்குகள் சரணாலயம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை புலிகளால் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. இங்கு தாக்குதலை நடத்துகின்ற புலிகள் கிழக்குப் பகுதியில் இருந்தே வருகின்றனர். ஆனால் யால சரணாலயப் பகுதியில் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இதுவரையில் ஒரு சந்தேக நபரையாவது கைது செய்வதற்கு இராணுவத்தினரால் முடியாமல் இருக்கின்றது. இது கவலைக்குரிய விடயமாகும். இது விடயத்தில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்துவதாக இல்லை. இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கின்ற பகுதிகளூடாகவே புலிகள் ஊடுருவி தாக்குதல்கள் நடத்துகின்றனர். இப்படி இருக்கும் போது இராணுவத்தினரால் ஏன் அ[illegible]னைத் தடுத்து நிறுத்த முடியாதிருக்கின்ற[illegible] திஸ்ஸ மஹாராம ஊடாகவோ அல்லது கதிர்காமம் ஊடகவோ புலிகள் வரப்போவதில்லை என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

யால சரணாலய பகுதி தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட புலிகளின் பலத்தை இல்லாதொழிக்க முடியாத இராணுவத்தினரே அங்கு இருக்கின்றனர். அவர்களால் ஒரு பூனையைக் கூட பிடிக்கமுடியவில்லை என்றார்.(ஓ)

# பயங்கரவாதத்திற்கு எதிரான போரினால் மனிதாபிமான உதவிகள் குழப்பப்படுகின்றன

(கொழும்பு)

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் நடத்தப்படும் யுத்தத்தின் பல்வேறு அணுகு முறைகளினால் மனிதாபிமான உதவிகளை மேற்கொண்டுவரும் அனைத்துலக அமைப்புக்களுக்கும் பாதிக்கப்படும் மக்களுக்குமிடையிலான தொடர்பு படிப்படியாக குறைந்துவரும் நிலை இன்றைய உலகில் காணப்படுகிறது.

இவ்வாறு அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றின் சர்வதேச கற்கை நெறிக்கான அமைப்பு வெளியிட்டுள்ள 2015 இல் மனிதாபிமான பணிகளின் நிகழ்ச்சிநிரல் என்ற ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

உலகளாவிய ரீதியில் அனைத்துலக அமைப்புகள் மேற்கொண்டுவரும் மனிதாபிமான பணிகள் அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் மீதான தாக்குதலின் பின்னர் புதிய பரிணாமத்தை அடைந்துள்ளன.

பாதிக்கப்படும் மக்கள் களத்தில் என்ன உதவிகளை எதிர்பார்க்கிறார்கள் என்பதை கவனத் தில் கொள்ளாது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் தொடர்பான தமது திட்டங்களுக்குள்ளும் அது தொடர்பான தமது அரசியல் மற்றும் இராணுவ நிகழ்ச்சி நிரல்களின் நிழல்களிலும் நின்றுதான் உலக நாடு கள் இன்று மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்த நாடுகள் தமது இலக்குகளை பிரதானமாக கொண்டு செயற்படுகின்றனவே தவிர அல்லல்படும் மக்களின் அவலக்குரலுக்கு செவிசாய்ப்பதாக தெரியவில்லை.

இந்த மாதிரியான ஒரு சூழ்நிலையில் போர் நடைபெறும் இடங்களில் சேவையாற்ற செல்லும் அனைத்துலக மனிதாபிமான அமைப்புகளின் பணிகள் பல்வேறு வகையிலும் கட்டுப்படுத்தப்படுகின்றன. அல்லல் படும் மக்களின் தேவைகளை கவனத்தில் எடுக்க அவற்றுக்கு போதுமான சுதந்திரம் வழங்கப்படுவதில்லை. அவதிப்படும் மக்களின் உணர்வுகளைபுரிந்து சேவையாற்ற அவற்றுக்கு களம் அமைத்துக் கொடுக்கப்படுவதில்லை.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற நடவடிக்கையை மேற்கொள்ளும் நாடுகள் களத்தில் தமது இலக்குகளை வெற்றிகொள்வதற்கு அனைத்துலக மனிதாபிமான அமைப்புக்களை கருவிகளாக பயன்படுத்துகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் அமைப்புக்களாக களத்தில் பணிபுரியும் மனிதாபிமான குழுக்கள் இராணுவ தேவைக்கு பயன்படுத்தப்படும்போது அவற்றின் உண்மையான சேவை என்ற இலக்கு அழிந்துவிடுகிறது. மக்களின் தேவைகளை அறிந்து கொள்ளவேண்டிய கட்டாய நிலை அற்றுப்போகிறது.

அந்த வகையில் அவை தமது இராணு நிகழ்ச்சி நிரலின்படி மனிதாபிமான அமைப்புகளை இயங்கவைப்பதற்கு பாரிய அழுத்தங்களை மேற்கொள்கின்றன.

இதனால் மனிதாபிமான அமைப்புகள் பாரிய சிக்கலையும் அச்சுறுத்தலையும் எதிர்நோக்கியுள்ளது. இது முன்னர், இருந்த போதும் கூட செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதலுக்கு பின்னர் மிகவும் அதிகரித்துவிட்டது.

இராணுவத்தின் கைகளில் இயங்குகின்ற மனிதாபிமான அமைப்புக்கள் சேவை என்று கூறிக்கொண்டு பல்வேறு அபிவிருத்தி பணிகளை மேற்கெண்டு அவற்றை தமது பிரசார இலக்குகளாக பயன்படுத்துகின்றனவே தவிர களத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் குரல்களை அவை ஒரு போதும் செவிமடுப்பதில்லை.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் நடைபெறும் கொங்கோவில் இயங்கும் அரச சார்பற்ற மனிதாபிமான அமைப்பு அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், இங்கு பின்லேடன் இருந்திருந்தால் தற்போது கிடைக்கும் உதவிகளை விட அதிக உதவிகள் இந்த மக்களுக்கு கிடைத்திருக்கும் என்று கூறியுள்ளார்.

அந்த வகையில் மனிதாபிமான பணிகளை மேற்கொள்வது இன்றைய உலகில் சுலபமான விடயம் என்று கூறிவிடமுடியாது. பயங்கரவாதத்துக்கு எதிராக போர் எனப்படுவது மனிதாபிமான பணிகளை குழப்பியடித்துள்ளது. அதற்கு இரண்டாவது கேள்விக்கே இடமில்லை.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரின் கீழ் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆப்கானிஸ்தான், ஈராக், பாகிஸ்தான், இலங்கை உட்பட பல நாடு களில் மேற்கொள்ளப்பட்ட 12 ஆய்வறிக்கைகளின் அடிப்படையிலேயே இந்த இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது என்று இந்த அறிக்கையை எழுதிய அன்ரோனியா டொனினி தெரிவித்துள்ளார். ஓ

## தலதா மாளிகையின் வருடாந்த உற்சவத்தையொட்டி பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

தலதாமாளிகையின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு 8 ஆயிரத்து 500 பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்களுடன் முப்படையினரும் கடமையில் ஈடுபடுவர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது. தலதா மாளிகையின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கண்டிக்குச் செல்லும் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தலதா மாளிகையில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் 7ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது. அத்துடன் உற்சவ நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதியே நிறைவடையவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் தலதா மாளிகையின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு சென்று வருகின்றனர். அந்த வகையில் இவ் வருடமும் இந்த உற்சவத்தை முன்னிட்டு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு செல்வர் என்ற எதிர்பார்ப்பிலேயே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. ஓ

## முதலாவது டெஸ்டில்

# முரளி, மெண்டிஸ் சுழல் சூறாவளி; இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வி



(கொழும்பு)

முரளி, மெண்டிஸின் சுழலில் சிக்கிய இந்திய அணி முதலாவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டம்,பந்துவீச்சு,களத்தடுப்பு என அனைத்திலும் ஜொலித்த இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி3 டெஸ்ட்,5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில்6 விக்கெட்டுக்களை இழந்து 600 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் வர்ண்புர 115 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஜெயவர்த்தன 136 ஓட்டங்கள்ளயும் சமரவீர 127 ஓட்டங்களையும் டில்சான் ஆட்டமிழக்காமல் 125 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான், இஷாந்த் சர்மா மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிபில் 6 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மேலதிகமாக 11 ஓட்டங்களை எடுத்து 170 ஓட்டங்களை பெற்றபோது அணித்தலைவர் கும்ளே ஒரு ஓட்டத்துடன் மெண்டிஸின் பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

எனினும் தனது ஆட்டமிழப்பில் சந்தேகம் இருப்பதாக இந்திய அணித்தலைவர் அனில் கும்ளே மூன்றவாது நடுவரிடம் மேல்முறையீடுசெய்தார்.

இதனை வீடியோ மீள்பார்வையில் கணித்த மூன்றாவது நடுவர் கும்ளேயின் மேல்முறையீட்டை நிராகரித்து ஆட்டமிழப்பு என அறிவித்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஹர்பஜன் சிங் 9 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து முரளிதரனின் பந்துவீச்சில் வர்ணபுரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த சகீர்கானும் 5 ஓட்டங்களுடன் மெண்டிஸின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்தடுத்து விக்கெட்டுக்களைஇழந்த இந்திய அணிக்கு ஒரு முனையில் வி.வி. எஸ்.லக்ஸ்மன் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார்.

10ஆவது விக்கெட்டுக்காக லக்ஸ்மனுடன் ஜோடி சேர்ந்த இஷாந்த் சர்மா நிதானமாக ஆடினார்.

மறுமுனையில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் அரைச்சதத்தை கடந்தார். எனினும் இந்திய அணி 223 ஓட்டங்களை எடுத்தபோது லக்ஸ் மன் 56 ஓட்டங்களுடன் மெண்டிஸின் குக்லி யில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்ட மிழந்தார்.

இறுதியில் இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் இலங்கை அணியை விட முதலாவது இன்னிங்ஸில்377 ஓட்டங்களால் பின்னிலையில் இருந்த இந்திய அணி பொலோ-ஒன் நிலைக்கு தள்ளப்பட்டது.

இதனடிப்படையில்தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட இந்திய அணி களமிறங்கியது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய காம்பீர்,சேவாக் ஜோடி நிதானமாக துடுப்பெடுத்தாடினர்.

இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனவால் முத்தையா முரளிதரன் பந்துவீச அழைக்கப்பட்டார்.



இந்திய அணி 25 ஓட்டங்களை எடுத்த நிலையில் சேவாக் 13 ஓட்டங்களுடன் முரளியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்த ஆட்டமிழப்பை நடுவர் வழங்க மறுத்தபோது மூன்றாம் நடுவரிடம் மேல் முறையீடு செய்தார் முரளிதரன்.

இதனை ஏற்ற மூன்றாவது நடுவர் வீடியோ மீள்பார்வையில் கணித்து ஆட்டமிழப்பு வழங்கினார்.

தொடர்ந்து களமிறங்கிய லக்ஸ்மன், காம்பீருடன் இணைந்து பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார்.

எனினும் லக்ஸ்மனும் 21 ஓட்டங்களை எடுத்த நிலையில் மெண்டிஸின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த டெண்டுல்கர் 12 ஓட்டங்களுடன் முரளியின் பந்துவீச்சில் டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


தொடர்ந்து ராவிட் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய காம்பீர் 43 ஓட்டங்களை எடுத்து முரளிதரனின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனவால் சிறப்பாக ஸ்ரொம் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த கங்குலி 4 ஓட்டங்களுடனும், ராவிட் 10 ஓட்டங்களுடனும் கார்த்திக் ஓட்டமெதனையும் எடுக்காமலும் அணித்தலைவர் கும்ளே (12),ஹர்பஜன் சிங் (15), சகீர்கான் (5) ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 2-வது இன்னிங்ஸில் 138 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 13 ஓவர்கள் பந்துவீசி மூன்று ஓட்டமன்ற ஓவர்கள் உட்பட26 ஓட்டங்களை கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் அஜந்த மெண்டிஸ் 18 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமன்ற ஓவர்கள் உட்பட 60 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையும் சாய்த்து இலங்கை அணியின் வெற்றிக்கு திருப்பு முனை அமைத்த முத்தையா முரளிதரன் தெரிவானார்.



இவ்வெற்றியின் மூலம்இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி காலியில் ஆரம்பமாகின்றது.

### சொந்த மண்ணில் இலங்கை அணியின் வெற்றிப் பாதை

இலங்கை அணி இறுதியாக 2006 ஆம் ஆண்டு ஏப்ரலில் கண்டியில் நடைபெற்ற டெஸ்ட்டில் தோல்வியடைந்த பின்னர் தொடர்ச்சியான வெற்றியை சொந்த மண்ணில் பெற்றுவருகிறது.

### முரளி சாதனை தொடர்கிறது

இப்போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியதன் மூலம் டெஸ்டில் இன்னிங்ஸ் ஒன்றில் 5 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தும் 65-வது தடவை இதுவாகும்.

அத்துடன் டெஸ்ட் போட்டியொன்றில் 10 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தும் 21 தடவை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (5)

## அரையிறுதியில் சானியா ஜோடி

(லாஸ் ஏஞ்சல்ஸ்)

லாஸ் ஏஞ்சல்ஸ் டென்னிஸ் தொடரின் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் சானியா மிர்சா,அமெரிக்காவின் பெத்தானி மெட்டக் ஜோடி முன்னேறியது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பெண்களுக்கான டபிள்யூ.டி.ஏ அந்தஸ்துப் பெற்ற ஈஸ்ட் வெஸ்ட் பாங்க் கிளாசிக் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

நேற்று முன்தினம் நடந்த இரட்டையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெத்தானி மெட்டக் ஜோடி, ரஷ்யாவின் எலீனா வெர்சினா, ஜ்வானரேவா ஜோடியைச் சந்தித்தது.

பரபரப்பான ஆட்டத்தில் சானியா ஜோடி முதல் செட்டை 6:3 எனக் கைப்பற்றியது.

பின்னர் சுதாகரித்து ஆடிய ரஷ்ய ஜோடி இரண்டாவது செட்டை 6:1 என எளிதாக தன் வசப்படுத்தியது.

வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது சுற்றில் எழுச்சி கண்ட இந்திய-அமெரிக்க ஜோடி 10:8 எனக் கைப்பற்றியது.



இறுதியில் சானியா,பெத்தானி மெட்டக் ஜோடி ரஷ்யாவின் வெர்சினா ஜ்வானரேவா ஜோடியை 6:3, 6:1, 10:8 என்ற செட் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. (5)

## 100 மீற்றர் ஓட்டத்தில் போவெல் முதலிடம்

(லண்டன்)

சர்வதேச கிராண்ட் பிரீ தடகளப் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட 100 மீற்றர் ஓட்டத்தில் முன்னாள் உலக சாதனையாளரான அசபா போவெல் (ஜமேக்கா) முதலிடத்தைப் பிடித்தார்.

அவர் பந்தய தூரத்தை 9.94 விநாடியில் கடந்தார். சமீபத்தில் ஸ்டாக் வோமில் நடந்த கிராண்ட் பிரீ பந்தயத்தில் 100 மீற்றர் ஓட்டத்தில் அவர்தான் முதலிடம் பிடித்தார்.

உலக சாதனையாளரும், ஜமேக்காவைச் சேர்ந்தவருமா உசைன் போல்ட் இதில் பங்கேற்கவில்லை.

ஒலிம்பிக் போட்டியின் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் பெற்ற போல்ட், போவெல் இடையே கடும் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போல்ட் கடந்த மே மாதம் 9.72 விநாடியில் கடந்ததே 100 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனையாகும். (5)

# வெள்ளைப்பூண்டின் விலை 400 ரூபாயாக அதிகரிப்பு

கொழும்பில் சார்க் மாநாடு நடந்து முடிப தற்குள் குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் உப உணவுப் பொருள் களின் விலைகள் கட்டுக்கடங்காத நிலையை அடைந்து விடும் என அஞ்சப்படுகின்றது.

ஒரு கிலோக்கிராம் வெள்ளைப் பூண்டின் விலை 100 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக அதிகரித்துள்ளது. அரச களஞ்சியங்களில் இவற்றுக்கான கையிருப்பு முற்றாகவே தீர்ந்து வருகின்ற நிலையில் அடுத்த கப்பல் வந்தடை யாவிடின் மோசமான பற்றாக்குறை ஏற்பட லாம் என எச்சரிக்கப்படுகின்றது.

ஆயினும் தற்போது காங்கேசன்துறை யை வந்தடைந்திருக்கும் தனியாருக்குச் சொந்தமான கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பமாகியுள்ளதாக யாழ். செயலகத் தகவல்கள் கூறுகின்றன.

கடல் கொந்தளிப்புக் காரணமாகப் பொருள்கள் இறக்கும் பணி சில வேளை தாமதமாகலாம் எனக் கூறப்படுகின்றது. இத னிடையே நிவாரண விநியோகங்களுக்கு என செயலகத்தால் வழங்கப்பட்ட அரிசியி னை தனியார் வர்த்தகர்களுக்குக் கூடிய விலையில் விற்ற குற்றச்சாட்டின் கீழ் கூட்டுற வுச் சங்க அதிகாரிகள் சிலர் ஒழுக்காற்று நட வடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். விசார ணைகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனைக்கு ஒரு கிலோ அரிசி 70 ரூபாய்க்கென யாழ். செயலகத்தில் முன்னர் வழங்கப்பட்டிருந் தது. இவ் அரிசி வெளிச் சந்தைகளில் 100 ரூபாய் முதல் 140 ரூபாய் வரையிலுமாக விற்கப்பட்டு வருகின்றது. (ந-5)

# குஜராத்தில் தொடர் குண்டுவெடிப்பு

இந்தியாவின் குஜராத் மாநில தலைநகர் அகமதாபாத்தில் நேற்று மாலை 6.45 மணியளவில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களில் 20 பேர் பலியாகி யுள்ளது டன் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந் துள் ளனர். சுமார் 70 நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து 17 இடங்களில் குண்டுகள் வெடித்ததாகக் கூறப்படுகின்றது. ஆறு தீவிர வாதிகள் ஒருங்கிணைத்து இந்தக் குண்டு வெடிப்பை நடத்தியிருப்பதாக குஜராத் பொலி ஸார் தெரிவிக்கின்றனர். (ந-5)

# ஐரோ. ஒன்றியத்தின் தடையை மீறி இலங்கைக்கு ஆயுத விநியோகம்

இலங்கைக்கு ஆயுதங்கள் விநியோகிக் கக் கூடாது என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையுத்தரவை மீறி உறுப்பு நாடொன்று இலங்கைக்கு ஆயுதங்களை விநியோகிப்ப தாக பாதுகாப்புத் தரப்பு உயர் அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

இது இலங்கைக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி எனப் பாதுகாப்புத் தரப்பு அதி காரி மேலும் தெரிவித்துள்ளார். தமிழீழ விடு தலைப்புலிகளுக்கு ஆதரவான அமைப்புக் கள் ஆயுதங்களை விநியோகிக்கக் கூடாது என அழுத்தம் கொடுத்து வந்தபோதிலும் குறித்த நாடு தொடர்ச்சியாகப் படையினருக்கு ஆயுதங்களை விநியோகிக்க ஒப்புக் கொண் டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரண மாகப் படையினரின் தாக்குதல் பலம் இரு மடங் காக உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படு கின்றது. (ந-5)

## மோதல் இடம்பெறும் பகுதி...

முகாம்கள் முல்லைத்தீவை நோக்கிய படை நகர்வை முன்னெடுத்து வருகின்றன. நேற்று முன்தினம் மாலை மல்லாவிப் பகுதியிலி ருந்து விடுதலைப்புலிகளின் சாள்ஸ் அன் ரணி படைப் பிரிவின் பிரதித் தலைவர் உட்பட 27 பேரினது சடலங்களை மீட்டிருப்பதாக வும், கடந்த காலங்களில் விடுத லைப்புலிகள் வெளிநாடுகளிலிருந்து பெருமளவான ஆயு தங்களைக் கொண்டு வந்திருப்பதாகவும் இராணுவத் தளபதி அந்தச் செவ்வியில் தெரி வித்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி மற்றும் முல் லைத்தீவுப் பகுதிகளை நோக்கி ஒரு இலட்சத் துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்தி ருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மற்றும் வவுனியா முன்னரங் கப் பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடு தலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்று வரும் கடுமையான மோதல்களால் அங்கி ருந்து ஆயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதி களுக்குச் சென்றிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் முல் லைத்தீவு-மாங்குளம் ஏ-9 வீதியில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி உத்தி யோகத்தரும் பூநகரிப் பிரதேச பிரதித் திட்ட மிடல் பணிப்பாளருமான சாந்தலிங்கம் விமலகுமார் கொல்லப்பட்டார்.

மன்னார், வவுனியாப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்குத் தேவை யான உதவிகளை ஒருங்கமைத்து விட்டு மோட்டார் சைக்கிளில் வவுனியா நோக்கிச் சென்றபோதே அவர் கொல்லப்பட்டதாகவும் இடம்பெயர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்க ளுக்கு உதவும் அமைப்பின் தலைவராக அவர் செயற்பட்டு வந்ததாகவும் கிளிநொச்சி மாவட்ட செயலக வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன.

கடந்த மாதம் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில துணுக்காய்ப் பிரதேச செயலா ளர் நந்தகுமார் கொல்லப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நாடெங்கி...

அரசாங்கம் திட்டமிட்டுள்ள இப் புதிய பலப் பரீட்சையில் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாருக்கு பக்க பலமாக கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் கள் இணைய வேண்டும் என அரசு, அர சாங்க அதிபர்களூடாக கட்டளையிட்டுள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் இன்று நாடெங்கிலும் ஏக காலத் தில் தேடுதல் மற்றும் சோதனை நட த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வீதி, பாலம், வீடு உள்ளிட்ட சகல இடங்களிலும் ஏக காலத்தில் சோத னை இடம்பெறும். கடும் சோதனை யின் போது அவரது பெயர், விலா சம், அடையாள அட்டை இலக்கம் எனப் பல விபரங்கள் விலாவாரியா கக் கேட்டுத் தனியான பதிவேட்டில் பதியப்படவுள்ளன. பிரதேச செயலக மட்டத்தில் பொலிஸார் இதற்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

இதேவேளை இது தொடர்பில் தமக்கு எதுவித அறிவித்தலும் விடப் படவில்லை என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இத் தேடுதல் நடவடிக்கை நடை பெறுமா? என்பது தொடர்பில் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை உறுதிப்படுத்தமுடியவில்லை. (ந-5)

A/L- 2008 சகல துறைகளுக்குமான
பொதுச் சாதாரண பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
ஆரம்பம் :- நாளை: திங்கள் (28.07.2008)

| | |
|---|---|
| பிரிவு -I | திங்கள் 8-12<br>செவ்வாய் 8-10 |
| பிரிவு -II | திங்கள், செவ்வாய் 12-2<br>புதன் 9-12 |

வழிகாட்டல் நூல் உட்பட கட்டணம் 200/=
DMI
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(C-1368)

# சார்க் மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பூட் டான், நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுக ளை அங்கத்தவர்களாகக் கொண்ட தெற்கா சிய நாடுகளின் உச்சி மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது.

இந்த நாடுகளின் அதிகாரிகள் மட்டத்தி லான மாநாடு இன்று ஆரம்பமாகும். அதே வேளை வெளியுறவுத்துறை அமைச்சர்களி டையிலான மாநாடு 31 ஆம் திகதியும் முத லாம் திகதியும் இடம்பெற இருக்கின்றது.

இதன் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு இரண்டாம், மூன் றாம் திகதிகளில் கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் இலங்கை நாடாளுமன்றத்திலும் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டினை ஒட்டி கொழும்பை யும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாது காப்பு ஏற்பாடுகள் மிகவும் கடுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது.

12 ஆயிரம் பொலிஸாரும் 10 ஆயிரத் துக்கும் மேற்பட்ட படையினரும் தலைநகரின் பாதுகாப்பினை மேலும் உறுதிப்படுத்துவதற் காக ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

# ஆட்கடத்தல்கள் அனைத்தும் அரசின் அனுசரணையிலேயே இடம்பெறுகிறது

## ஜே.வி.பி. எம்.பி. விஜித கேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறுகின்ற ஆட்கடத் தல்கள் அனைத்தும் அரசாங்கத்தின் அனு சரணையிலேயே இடம்பெறுவதாக ஜே.வி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பிரசாரச் செயலாளருமான விஜித கேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அரசாங்கத்தின் ஆதரவி லேயே கடத்தல்களும் கொலைகளும் இடம் பெறுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். அதிகரித்து வரும் கடத்தல்களும் கொலை களும் இலங்கையின் ஜனநாயகத்தைக் கொலை செய்வதற்குச் சமமானது என அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் இன்று கடத்தல்கள் காரண மாகப் பயந்த சூழ்நிலையில் வாழ்ந்து வரு கின்றனர். இன்று தமிழர்கள் பெருமளவாக வாழும் இடங்களில் வெள்ளை வான் கலா சாரம் அதிகரித்துள்ளதாகவும் ஜே.வி.பி. எம். பி. விஜித கேரத் தெரிவித்துள்ளார். (ந-5)

# சார்க் மாநாடு நடக்கும்போது வட-கிழக்கு வாகனம் வரத் தடை?

இன்றிலிருந்து சார்க் மாநாடு நடைபெ றும் காலங்களில் வடக்குக் கிழக்கு வாகனங் கள் கொழும்புக்கு வரத் தடை விதிக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வழமையாகக் கொழும்புக்குச் செல்லும் வாகனங்கள் இன்றுமுதல் 4 நாள்களுக்குச் செல்வதில்லை என கூறியுள்ளமை குறிப்பி டத்தக்கது.

சார்க் மாநாடு நடைபெறும் காலங்களில் தமிழர்கள் கொழும்பை மறந்து விட வேண் டும் என சகல தரப்பினராலும் ஊடகங்களில் அறிவிக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. குறிப்பாக வடக்குக் கிழக்கு மற்றும் மலைய கத் தமிழர்களுக்கு இவ் அறிவித்தல் விடுக் கப்பட்டுள்ளது.

தலைநகர் கொழும்பில் சார்க் மாநாட்டை யொட்டி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ள மை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# வடக்கு மோதல்களில் 25 புலிகள்-8 படையினர் பலியாம்

## படைத் தரப்பு அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்திற்கு மேற்கே துணுக்காய்ப் பிரதேசத்தில் ஒட்டன் குளம் பகுதியில் இராணுவத்திற்கும் விடுத லைப்புலிகளுக்கும் இடையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கடும் மோதல்களில் 25 விடுதலைப்புலிகளும் 8 இராணுவத்தினரு கொல்லப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச் சகம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மேலும் 8 இராணு வத்தினர் காயமடைந்திருப்பதாகவும் பாது காப்பு அமைச்சுக் கூறியிருக்கின்றது. வவுனி யா வைத்தியசாலையில் வெள்ளியன்று ஒப் படைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் மொத்தம் 30 சடலங்களில் 11 சடலங்கள் விடு தலைப்புலிகளிடம் கையளிக்கப்படுவதற்கா கச் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

எஞ்சியுள்ள 19 சடலங்களும் சில நாள்க ளில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது. (ந-5)

## புலிகளின்...

புலிகளின் குரல் வானொலியின் நிகழ்ச் சிகள், கவிதை நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்ச் சிப் படைப்பாளராக விளங்கியவர் ராணி மைந்தன்.

விடுதலைப் பாடல்களையும் எழுதியிருக் கும் அவர், சிறந்த ஒரு பேச்சாளராகவும் விளங்கினார். தமிழீழத் தேசியத் தொலைக் காட்சியிலும் அறிக்கை உள்ளிட்ட பல நிகழ்ச்சிக ளை அவர் உருவாக்கி யுள்ளார். (ந-5)

உள்நாடு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:- அனுப்பப்படும் ஒவ்வொரு பொதிகளிற்கும் காப்புறுதி உண்டு

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.